

# ஸ்ரீ தேசிக ஸேவா

ஸ்ரீதேசிக தர்சன மாதப் பத்திரிகை

## SRI DESIKA SEVA / श्री देशिक सेवा

மலர் - 20 நவம்பர் - 2022 (சுபக்ருத் - கார்த்திகை) இதழ் - 2

தனிப்ரதி விலை ரூ.25/-





**Seva Swamy Memorial Foundation**
No.10 (old No.2) Lakshmipuram 2nd Street, Villivakkam, Chennai-600 049.
Phone: 2618 0481 E-mail: seva@sevaonline.org Web: www.sevaonline.org

# ஸ்ரீ தேசிக ஸேவா

## வருநாள் பழுதற்று வாழும் வகையதில் மன்னுவமே

**ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்கிக கேஸரீ ।**
**வேதாந் தாசார்யவர்யோமே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ।।**

**ராமாநுஜ தயாபாத்ரம் ஞானவைராக்ய பூஷணம் ।**
**ஸ்ரீமத் வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்த தேசிகம் ।।**

**சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்**
**பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று**
**தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு**
**வானேறப் போமளவும் வாழ்வு.**

**ஜீவநம் ஜகதாம் ஜீயாத் கிமப்யபகதஸ்ப்ருஹம் ।**
**ஸ்வதந்த்ரம் ஸர்வதந்த்ரேஷு வேங்கடேசாஹ்வயம் மஹ: ।।**

◇ ◇ ◇

**ஹயக்ரீவ க்ருபாபாத்ரம் ஆத்ரேயகுல பூஷணம் ।**
**ஸேவாக்ய ஸ்வாமிநம் ஸேவே புதந்வபரதேசிகம் ।।**

**இந்த இதழில்... பக்கம்**


| | |
|---|---|
| விண்ணப்பம் | 5 |
| ஸேவா ஸ்வாமி நூறு நாள் உத்ஸவம் | 7 |
| Seva Swamy Centenary Celebrations | 16 |
| இரு கை கூப்பி உரைப்போம் (3) | 23 |
| உரையாடலில் உலா வரும் உத்தமர் | 29 |
| பகவானின் ப்ரிய மஹிஷிகள் | 33 |
| கேள்வி - பதில் | 41 |
| ஸ்ரீ தேசிக திவ்ய ஸஹஸ்ரநாமம் | 47 |
| அன்னாதூர் ஸ்வாமி ஸதாபிஷேகம் | 52 |
| முனிவேழமும் கவிஸிம்ஹமும் | 58 |
| கீதார்த்தம் | 61 |

**அஸ்தோகாத்வரி, கச்சி கடாம்பு கவிவித்வன்மணி**
**ஆத்ரேய அரசாணிபாலை நல்லூர்**
**ஸேவா ஸ்ரீநிவாஸராகவார்ய மஹாதேசிகன் அருளிச்செய்த**

# கோதண்டராம பஞ்சாசத்

(ஸேவா ஸ்வாமியின் சிற்றுரையுடன்)

**माधुर्यं तव नाम्नि साधुविदितं भक्तोपभोग्यं सदा**
**विश्वामित्रमुनिजंगाद मधुरां रामेति वाणीं तदा।**
**मुग्धो रामगुणेषु सत्यवचनस्तातोऽपि रूपे तथा**
**कोवान्यो भयमश्नुते मयसुतात् ते नाम भोग्यं हि नः** 27

**மாதுர்யம் தவ நாம்நி ஸாது விதிதம் பக்தோப போக்யம் ஸதா!**
**விச்வாமித்ர முநிர் ஜகாத மதுராம் ராமேதி வாணீம் ததா**
**முக்தோ ராமகுணேஷு ஸத்யவசநஸ் தாதோபி ரூபேததா**
**கோவாந்யோ பயமச்நுதே மயஸுதாத் தே நாம போக்யம் ஹிந:**

**27. கோதண்டராம: உனது திருநாமத்தில் எவ்வளவு தான் இனிமை இருக்கின்றது! இதை அனைவரும் அறிவர். எனக்கும் நன்ருகத் தெரியும். உன்னிடம் பக்தி செய்பவர் இதை எப்பொழுதுமே போக்யமாக அனுபவித்து வருவர். ஒரு சமயம் விச்வாமித்ர முனிவர் ராமா என்று உன்னை அழைத்தார். அது அவருக்கு மட்டும் அல்ல ராமனுக்கு மட்டும் அல்ல. வான்மீகிக்கும் எவ்வளவு மதுரமாயிருந்தது! ராமேதி மதுராம் வாணீம் என்றல்லவோ கூறிஞர் . பெயர் மட்டுமல்ல- ராமனுடைய குணங்களும் மதுரமானவை. தந்தையோ ரூபம் குணம் பெயர் எதிலுமே மோஹித்துப் போஞர். அதே சமயம் உன் பெயரைக் கேட்டவுடன் அஞ்சுவாரும் உண்டு. மாரீசன் தானே பயந்தான். ரகாராதீநி நாமாநி என்று அலறிஞன். ராமா அவனைத் தவிர்த்து உன் பெயரில் உள்ள இனிமையை அனுபவிக்காதவர் உண்டோ! உனது திருநாமமே எங்களுக்கு மிகவும் போக்யமாயுள்ளது!**

# விண்ணப்பம்

மணிமண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் பரிமுகப் பெருமானின் திருவருளால் நம் ‘ஸ்ரீ தேசிக ஸேவா‘ இதழுக்கு இதழ் மெருகேறி வருகிறது. மஹனீயர்களின் கைங்கர்யத்தினால் ஒவ்வொரு இதழும் வெளியிடப்பட்டு வருகின்றது.

ஸேவா ஸ்வாமியின் மீது மிகுந்த ப்ரதிபத்தி கொண்டவர்கள் பலர். இந்த இதழுக்கான நிதிஉதவியை அளித்தவர் ஸ்ரீ உ.வே. அன்னாதூர் வாஸுதேவாசார்யர் ஸ்வாமி. பல பெருமைகள் கொண்ட இந்த ஸ்வாமியின் ஶதாபிஷேக உத்ஸவம் சமீபத்தில் விமர்சையாக நடந்தது,ஸேவா ஸ்வாமியின் தேசிக ஸம்ப்ரதாய ஸேவையை பெரிதும் போற்றுபவர். காஞ்சிபுரத்தில் வேத பாடாசலை அமைத்து, பல ஸம்ப்ரதாய கைங்கர்யரங்களைச் செய்து வரும் அந்த ஸ்வாமிக்கு அடியோங்களின் க்ருதக்ஞதையை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸேவா ஸ்வாமியால் 1948ல் தொடங்கப்பட்டு ஸம்ப்ரதாய ஸேவையை பெரிய அளவில் செய்து வந்த இந்த ஸ்ரீ தேசிக ஸேவா பத்ரிகை, ஸ்வாமி திருநாட்டை அலங்கரித்த பிறகு புதிய வடிவில் வெளியிடப்பட்டு, கடந்த மாதம் தனது இருபதாவது ஆண்டைத் தொடங்கியது. மேலும், ஸேவா ஸ்வாமியின் நூற்றாண்டு விழாவும், இந்த பத்ரிகையின் 75வது ஆண்டு நிறைவு விழாவும் ஒரு சேர அமைவது கூடுதல் சிறப்பு.

இந்த இதழில் ஸேவா ஸ்வாமியின் நூற்றாண்டு விழா திட்ட அறிவிப்புகளுடன், அவர் மேன்மையைப் போற்றும் விதமாக சிறப்பு வ்யாஸங்களும் இடம் பெற்றுள்ளன.

ஸேவா ஸ்வாமியின் நூற்றாண்டு விழாவின் அங்கமாக. தொடர்ந்து நடைபெற்று வரும் மாஸ திருநக்ஷத்ர உத்ஸவங்களுடன், முப்பெரும் விழா நடைபெற உள்ளது. முதல் அம்சமாக, நூறு நாள் உத்ஸவம் நடைபெற இருக்கிறது. அதன் விவரங்கள் வேறு பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ளன.

மணிமண்டபத்தில், ஆழ்வார் ஆசார்யர் திருநக்ஷத்ரங்கள் சிறப்பாக நடைபெற்றன. கடந்த ஐப்பசி மாதத்தில் தீபாவளிப் பண்டிகையும், முதலாழ்வார் திருநக்ஷத்ரங்களும் சிறப்பாக நடைபெற்றது.

# Sponsor for Sri Desika Seva - November 2022

## Sri. U. Ve. (Dr.) Annathur Vasudevacharya Swami

Sri. U. Ve. Annathur Vasudevacharya Swami is a great scholar par excellence and has authored numerous books in sanskrit, tamil and english. Born in 1942 in an ardent Sri Vaishnava family at Annathur Village in Chengalpattu District in Tamil Nadu, completed his early childhood education in a village school. Later joined Sri Ahobila Mutt Oriental School, Madurantakam in 1953 for further education. Had his Pancasamskaram under the auspices of His Holiness Thevanarvilagam Azhagiyasingar, the 43rd Pontiff of Sri Ahobila Mutt.

He joined Sri Ahobila Mutt Samskrit College, Madurantakam as its Principal where he had been instrumental in obtaining UGC accreditation for the courses offered. Later he joined as Professor in the Sanskrit Department of Sri Chandrasekharenda Saraswati Viswa Maha Vidyalaya and retired in the year 2003. He was the recipient of the National Award for Teachers in the year 1988 and had received the Presidential accolade then. He was honoured with the title “Samskrta Pracara Caturah’ for propagating Samskrit by the Jnana Vikasa Kendra, Chennai in 1989. He was honoured with Samskrit Seva Sammana by Samskrita Prachara Samiti, Hyderabad, 2006.

Apart from receiving many honours, he is also the Founder Trustee of the “SRI MALOLA SADANAM” Trust. Through this deed, he has established the Sri Malola Samskrta Vidyapeetam - Veda Vedanta Gurukulam for imparting Vedic, Dharmic and Sanskrit education to students. Annadhur swami has established a sprawling library at the Kanchipuram vidyapeetam premises hosting over 20,000 vedic-smparadaic-sanskrit books. He has been continuously supporting the cause of Veda-Sastra-Samskrta abivriddhi through his benevolent works.

*We thank him for sponsoring the issue and pray Lord Lakshmi Hayagriva of Mani Mandapam for the welfare of the family.*

ஸ்ரீ:
ஸ்ரீமதே லக்ஷ்மீ ஹயவதந பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:
ஸ்ரீமத் ஸேவா ஸ்ரீநிவாஸராகவார்ய மஹாதேசிகாய நம:

# ஸ்ரீ ஸேவா ஸ்வாமி நூற்றாண்டு விழா நூறு நாள் உத்ஸவம்

## (முப்பெரும் விழாவின் முதல் பெருவிழா)

தேசிக பக்தரத்னம் ஸ்ரீ ஸேவா ஸ்வாமியின் நூற்றாண்டு விழா ஓராண்டு விழாவாக சிறப்புடனும், கோலாஹலத்துடனும் கொண்டாடப்பட்டு வருவது ஆஸ்திக லோகம் அறிந்ததே! ப்ரதி மாஸமும் சித்ரா நக்ஷத்ரத்தில் வேத, ப்ரபந்த தேசிக ப்ரபந்த - ஸ்தோத்ர பாராயணங்களுடன் ததீயாராதனங்கள் அடைவாக, ஸ்வாமியின் குடும்பத்தினர் க்ருஹங்களில் கொண்டாடப்பட்டு வருகிறது.

**நூறு நாள் உத்ஸவம்**

நாளது மார்கழி ஓங்கி (18-12-2022) முதல் (மார்கழி சித்திரை முதல்) ஓங்கி என்ற பாசுரத்திற்கிணங்க ஸ்வாமியின் வைபவத்தை பறைசாற்றும் விதமாக 'நூறு நாள் உத்ஸவமாக' கொண்டாட சரண்ய ஸங்கல்பம்.

**ஏன் நூறு நாள்?**

1) நூற்றாண்டை குறிப்பதற்கு நூறு நாள் என்றும் கொள்ளலாம்

2) ஸ்வாமி தேசிகன் 7வது நூற்றாண்டு 90 நாள் உத்ஸவமாக கொண்டாடப்பட்டது யாவரும் அறிந்ததே. அதில் ஸேவா ஸ்வாமியின் பங்கு அளவிடமுடியாதது. அந்த ஸமயத்தில் 50க்கும் மேற்பட்ட ஸ்வாமி தேசிகனின் நூல்கள் (ஸ்தோத்ரம், ப்ரபந்தம் முதலியன) ஸேவா ஸ்வாமியின் எளிய உரையுடன் வெளியிடப்பட்டன. ஸேவா ஸ்வாமியின் நூற்றாண்டில் அந்த நூல்களை மீண்டும் பதிப்பித்து வெளியிட உத்தேசம். அவற்றுடன் ஸேவா ஸ்வாமி இயற்றிய நூல்களும் வெளியிடப்படும். (ஸ்தோத்ரங்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது).

- ஸ்ரீவைஷ்ணவர்கள் / விசேஷமாக தேசிக பக்தர்கள் தங்கள் க்ருஹங்களில் ஒரு நூலை வெளியிடலாம்.

– ஒரு புஸ்தகம் வெளியிட ரூ.25000/– செலவாகிறது. அந்த கைங்கர்யத்தை ஏற்கலாம். 100 ப்ரதிகள் உபயதாரருக்கு வழங்கப்படும்.

– உபயதாரர்கள் விரும்பும் தினம் மற்றும் நூல்கள் தேர்வு செய்யலாம்.

– தங்கள் க்ருஹங்களில் வெளியிடவசதியில்லாத நிலையில் மணிமண்டபத்தில வெளியிடலாம்.

– ஒரு குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும்ஒரு புத்தகத்தை வெளியிட ஆவன செய்யலாம்.

– மார்ச் நான்காவது வாரத்தில் 100 நாள் உத்ஸவம் நிறைவு பெறும்.

– உபயதாரருக்கு 80Gயின் கீழ் வருமான வரிச்சலுகை உண்டு. இந்த கிடைத்தற்கரிய தேசிக ஸேவா கைங்கர்யத்தில் பங்கு கொள்ள ப்ரார்த்திக்கிறோம். மேலும் விவரங்களுக்கு 9841046264 / 9283229550 / 8754447367 என்ற எண்களில் தொடர்பு கொள்ளவும்.

Bank Details : **SEVA TRUST**, A/C No.409010003775, Kotak Mahindra Bank, Villivakkam Branch, Chennai - 49. IFSC Code: KKBK0008486.

**ஸேவா ட்ரஸ்ட்**

---

**குறிப்பு:** ஸேவா ஸ்வாமி நூற்றாண்டு விழாவின் அங்கமாக நடைபெறவிருக்கும், நூறு நாள் உத்ஸவத்தில் வெளியிடப் படவிருக்கும் நூல்களின் பட்டியல் அடுத்த பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. நூல்களுக்கு உபயம் செய்ய விரும்புவோர், தொகை அனுப்பிய விவரங்களுடன் (IMPS / RTGS / NEFT / Cheque details), தேர்ந்தெடுத்த நூலின் பெயர், தங்கள் பெயர், விலாசம், தொலைபேசிஎண், குடும்ப மற்றும் ஆசார்ய ஸம்பந்த குறிப்புகளை, அனுப்புமாறு வேண்டுகிறோம். நவம்பர் 30ம் தேதிக்குள் விவரங்களை தெரியப்படுத்துமாறு வேண்டுகிறோம்.

மேலும் விவரங்களுக்கு: 9841046264 / 9283229550 / 8754447367 என்ற எண்களில் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்தோத்ரம் / ப்ரபந்தம்**
ஹயக்ரீவ ஸ்தோத்ரம் (B)
வரதராஜ பஞ்சாசத் (B)
அஷ்டபுஜாஷ்டகம்
காமாஸிகாஷ்டகம் (B)
ஷோடசாயுத ஸ்தோத்ரம்
மும்மணிக்கோவை
ஸாரஸங்க்ரஹம்
அபீதிஸ்தவம் (B)
ஆஹார நியமம்
வைராக்ய பஞ்சகம்
துவயச்சுருக்கு
ஸ்ரீ தேசிகாஷ்டோத்தர சதம்
திருச்சின்னமாலை (B)
ரஹஸ்ய சிகாமணி
பரமபதஸோபாநம்
கோதாஸ்துதி (B)
அம்ருதாஸ்வாதிநீ
ந்யாஸதசகம்
தயாசதகம் (B)
ப்ரதாந சதகம்
தேஹளீச ஸ்துதி
கோபாலவிம்சதி (B)
வேகாஸேது ஸ்தோத்ரம்
தேவநாயக பஞ்சாசத்
பூஸ்துதி (B)
பகவத் த்யாந ஸோபாநம் (B)
ந்யாஸ திலகம்
ஸுதர்சனாஷ்டகம் (B)
தசாவதார ஸ்தோத்ரம் (B)
தத்வமுக்தாகலாபம்
அதிகார ஸங்க்ரஹம்
நவமணிமாலை
ப்ரார்த்தநாஷ்டகம்
துவயச்சுருக்கு
தத்வமாத்ருகை
உபகார ஸங்க்ரஹம்
வேதாந்த தேசிகர் ஓடம்
அம்ருதரஞ்சனி
ஹஸ்திகிரி மாஹாத்ம்யம் (B)
தத்வ ரத்னாவளி
ரஹஸ்ய நவநீதம்
தத்வ நவநீதம்
தேசிக கத்யம்
ஸ்ரீஸ்துதி (B)
அஞ்சலி வைபவம்
பிள்ளையந்தாதி (B)
ஸம்ப்ரதாய பரி சுத்தி
திருமந்திரச் சுருக்கு
அர்த்த பஞ்சகம்
கீதார்த்த ஸங்க்ரஹம்
ப்ரபந்த ஸாரம்
அடைக்கலப்பத்து
ஸ்ரீவைஷ்ணவ தினசரி
பன்னிரு நாமம்
அச்யுத சதகம்
மஹாவீர வைபவம் (B)
கருட தண்டகம்
கருட பஞ்சாசத்
யதிராஜ ஸப்ததி (B)

**ஸேவா ஸ்வாமி அருளியவை**
தாமோதர ஸுப்ரபாதம்
லக்ஷ்மீஹயக்ரி வ ஸுப்ரபாதம்
ஸ்ரீ லக்ஷ்மீஹயவதன பஞ்சாஶத் (P)
லக்ஷ்மீ ஹயக்ரீவ நக்ஷத்ர மாலிகா
கலா கலன மாலிகா
லக்ஷ்மீ ஹயக்ரீவ மங்களம்
ஸ்ரீ லக்ஷ்மீ பஞ்சாஶத்
ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பஞ்சாஶத் (P)
ஸ்ரீ கோதண்டராம பஞ்சாஶத்
ஸ்ரீ கடிகாசல ஸ்தவம்
கோதா ஸ்தோத்ரம்
பத்மாவதி ஸ்தோத்ரம் (B)
ஸௌபாக்யலக்ஷ்மீ ஸ்தோத்ரம் (B)
லக்ஷ்மீநாராயண ஸ்தோத்ரம்
ஹனுமத் பஞ்சாஶத் (பூர்வ)
அக்ஷய ஆராதனம்

Note: B: Already booked by sponsors
P: Already printed during Sri SevaSwamy monthly thirunakshatra Utsavam

ஸ்ரீ:
ஸ்ரீமதே லக்ஷ்மீ ஹயவதந பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:



# ஸ்ரீ ஸேவா ஸ்வாமி நூற்றாண்டு விழா

(ஓராண்டு விழா)

அபர தேசிகனாகவும், ஸ்வாமி தேசிகனை உலகத்தில் வெளிப்படுத்திய உத்தமர்களில் உத்தமராகவும், இந்த நூற்றாண்டிலும், முன் நூற்றாண்டிலும் தேசிகனுக்காகவே வாழ்ந்த பெருந்தகையாகவும், தேசிக ஸேவையே தாரக போஷக போக்யமாகவும், உண்ணும் சோறு, பருகு நீர், தின்னும் வெற்றிலை என்னுமாப்போல் நினைத்திருந்தவரும், தேசிக பாரமைகாந்த்யம் (மதுரகவி நம்மாழ்வாரை தெய்வமாகவும், அமுதனார் உடையவரை தெய்வமாக நினைத்தது போல், தேசிகனை பரதெய்வமாக நினைத்தல்)உள்ளவராகவும், ஸ்வாமி தேசிகனின் 7வது நூற்றாண்டு விழாவில் தன்னை உடல், பொருள் ஆவியோடு இணைத்துக் கொண்டதுடன், ஸ்வாமி தேசிகனை வெளிப்படுத்த 'ஸேவா' என்ற பத்ரிகையை நடத்தியவரும், ஸம்ப்ரதாய பற்று ஏற்பட ' ஸ்ரீ தேசிக தர்சன டைரி' என்பதை முதன்முதலாக ஏற்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தியவரும், ஸ்வாமி தேசிகன் அருளிய ஸ்தோத்ரங்கள் பல பாஷைகளில் வெளியிட உத்தேசித்து, ஸ்ரீ வேதாந்த தேசிக ஆராய்ச்சி மையத்தை அமைத்தவரும், வில்லிவாக்கத்தில் மணிமண்டபத்தை நிர்மாணித்து, க்ஞான பஞ்சாயதன மூர்த்திகளை ப்ரதிஷ்டை செய்தவரும், பல்லாயிரக்கணக்கான வடமொழி, தமிழ் மொழிகளில் ஸம்ப்ரதாய இலக்கியங்களை அருளிச் செய்தவரும், ஸம்ப்ரதாய மடாதிபதிகளாலும், மஹா வித்வான்களாலும், லௌகிக ப்ரமுகர்களாலும் பலவகையில் பஹுமானிக்கப்பட்டவரும், பலவகை பிருதங்களால் அலங்கரிக்கப்பட்டவரும், இந்திய ஜனாதிபதியால் ஸம்ப்ரதாய, இலக்கிய ஸேவைக்கு பிருதம் அளிக்க்ப்பட்டவரும், 'நல்லூர்' என்ற ஸ்ரீக்ராமத்தில், எண்ணற்ற யாகங்கள் செய்த ஆத்ரேய குலத்தில், திருக்குடந்தை தேசிகன் வம்ச தோன்றலாய் அவதரித்தவரும், கவிவித்மணியாக திகழ்ந்தவரும்,

'ஸேவா ஸ்வாமி' என்றே அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்டவருமான மஹனீயருக்கு நூற்றாண்டு (ஶதமானோத்ஸவம்) நடைபெற்று வருகிறது.

## சுபக்ருத் வருஷத்திய 'சுபக்ரது'வான ஶதமானோத்ஸம்

சுபக்ருத் வருஷத்தின் சித்திரை - சித்திரை முதல் ஸேவா ஸ்வாமியின் ஶதமான உத்ஸவம் தொடர்ந்து ஓராண்டு விழாவாக ஸ்வாமி தேசிகன், திவ்ய தம்பதிகள் ஸங்கல்பித்தபடி, ப்ரதி மாஸமும் சித்ரா நக்ஷத்ரத்தில் உத்ஸவங்கள் நடந்து வருகிறது. க்ரந்த, சதுஷ்ட்டய, ஸ்தோத்ர பாட பாராயணங்களுடன், பாகவத ததீயாராதனங்கள் நடைபெற்று வருகின்றன.

## முப்பெரும் விழா

(1) சுபக்ருத் வருஷத்திய ஸ்வாமி தேசிகன் உத்ஸவம் நூற்றாண்டு விழாவின் நடுவில் வருவதால், விசேஷ தேசிகோத்ஸவம் நடைபெற்றது. 10 நாள் உத்ஸவத்தில் 5 நாட்கள் ஸ்வாமி தேசிகன் பலவித வாஹனங்களில் வீதி புறப்பாடு கண்டருளினார். 10 நாட்களும் மணிமண்டபத்தில் பாகவத ததீயாராதனம் நடந்தது. எப்போதும் போல் நவராத்ரி உத்ஸவமும் வெகு கோலாஹலமாக ஸங்கீதாராதனமும் நடைபெற்றது.

(2) சுபக்ருத் வருஷத்திய தனுர் மாஸம் தொடங்கி, நூற்றாண்டை ஸூசிப்பிக்கும் வகையில், நூறு நாள் உத்ஸவம் நடத்த திவ்யதம்பதிகள் ஸங்கல்பம்.

ஸ்வாமி தேசிகனின் 7வது நூற்றாண்டில் 90 நாள் உத்ஸவமாக கொண்டாடியது யாவரும் அறிந்ததே. இன்றைய தலைமுறைக்கு அந்த உத்ஸவத்தின் அருமை - பெருமை - மஹிமை தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஸ்ரீ ஸேவா ஸ்வாமியின் பங்கு வார்த்தைக்கு உட்படாதது. 90 நாட்களில் ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமாளிகைகள் 50க்கு மேல் ஸ்வாமி தேசிகனின் ஸ்தோத்ங்கள், தமிழ் ப்ரபந்தங்கள் வெளியிடப்பட்டன. ஸேவா ஸ்வாமியின் எளிய உரையுடன் அவை வெளிவந்தன. இவை தவிர, பல நூறு பக்கங்கள் கொண்ட இரு சிறப்பு மலர்களை வெளியிடுவதில் முக்கிய பங்காற்றி, ஸாதனை படைத்தார். இது ஸேவா ஸ்வாமியின் வாழ்நாள் ஸாதனையாகும். அந்த புஸ்தகங்களை மீண்டும் பதிப்பித்து 100 நாட்களில் ஸ்ரீ வைஷ்ணவர்களின் திருமாளிகைகளில் வெளியிட பகவத் ஸங்கல்ப

அனுக்ரஹத்தை அவலம்பித்து உத்தேசம். (மார்கழி ஓங்கி - மார்கழி சித்திரை முதல் ஸ்வாமி நூற்றாண்டு விழா - பங்குனி - சித்திரை வரை). (December 18, 2022 - April 7, 2023). இதில் கலந்து கொள்ள விரும்பும் ஸ்ரீவைஷ்ணவர்கள் வரவேற்கப்படுகிறார்கள். ஒரு புத்தகம் வெளியிட சுமார் ரூ. 25,000 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆட்ய ஸத்துக்கள் இதில் பங்கு பெறலாம். புத்தகங்களின் பெயர்கள் வேறு பக்கங்களில் வெளியிடப்பட்டிருக்கிறது. 100 புத்தகங்கள் உபயதார ஸ்வாமிகளுக்கு வழங்கப்படும்.நம் வாழ்நாளில் ஸ்வாமி தேசிகனுக்கு செய்யும் கைங்கர்யங்களில் இதை விட பாக்யமானது வேறெதுவும் இருக்கப் போவதில்லை!

## நூற்றாண்டு விழாவின் நிறைவு - 10 நாள் உத்ஸவம்

பலவிதமான இன்னல்களை , பெருந் தொற்றைக் கடந்து, மேதினியில் இருக்கின்றோம். இப்படிப்பட்ட மஹநீயரின் நூறாவது ஆண்டைக் கொண்டாடும் நிலையில் எம்பெருமான் அனுக்ரஹித்திருக்கிறான்.

நாளது பங்குனி மாதம் புனர்வஸு நக்ஷத்ரம் (30-3-2023) - ஸ்ரீராம நவமி முதல் தொடங்கி பங்குனி சித்திரை நக்ஷத்ரம் வரை (07-04-2023) நிறைவு நாள் உத்ஸவம நடைபெற்று, மறுநாள் 08-04-2023 அன்று விடாயகற்றி உத்ஸவத்துடன் ஸேவா ஸ்வாமி நூற்றாண்டு விழா நிறைவு பெறுகிறது. நிறைவு நாள் உத்ஸவ நாட்களில் வேத (சதுர்வேதம்), ப்ரபந்த, இதிஹாஸ, புராண, கீதை, ஸஹஸ்ர நாம, ஸ்தோத்ர பாட பாராயணங்களுடன் ப்ரதி தினம் ததீயாராதனங்களுடன் கொண்டாடலாம்.தீதிலா நல்லோர் திரளில் திரண்டு மகிழலாம்.

## நிறைவு நாள் உத்ஸவம் - திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

(1) ஸேவா கால பாராயண பூர்த்தி

(2) வித்வத் ஸதஸ் - வித்வான்களை கௌரவித்தல்

(3) லௌகிக வித்வத் ஸதஸ் - வித்வான்களை கௌரவித்தல்

(4) ப்ரஹஸ்பதி வித்வத் ஸதஸ் - வித்வான்களை கௌரவித்தல்

(5) அருளிச் செயல் வித்வத் ஸதஸ் - வித்வான்களை கௌரவித்தல்

(6) ஆகம வித்வத் ஸதஸ் - வித்வான்களை கௌரவித்தல்

(7) ஸ்த்ரீ வித்வத் ஸதஸ் - வித்வான்களை கௌரவித்தல்

(8) ஸங்கீத வித்வத் ஸதஸ் - வித்வான்களை கௌரவித்தல்

(9) கைங்கர்ய பரர்கள் கௌரவித்தல்

(10) ஸம்ப்ரதாய புரவலர்களை கௌரவித்தல்

(இதற்கான தனி பத்ரிகை பிறகு வெளியிடப்படும்)

**விண்ணப்பம்**

நூற்றாண்டு விழாவில் 'ஏதேனுமாகி' ஸேவா ஸ்வாமியின் க்ருபைக்கும், அதன் மூலம் ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்களின் அருளுக்கும், ஸ்வாமி தேசிகன், உடையவர், ஆழ்வார்கள் திவ்ய தம்பதிகளின் அனுக்ரஹத்திற்கு பாத்ரமாகி, சுபக்ருத் வருஷத்தை 'சுபக்ரது' (நல்வேள்வி) வருஷமாக்குவோம்.

**குறிப்பு :** மேற்படி உத்ஸவங்களுக்கு சுமார் 25 லக்ஷம் வரை செலவாகலாம் என்று 9கணக்கிடப்பட்டிருக்கிறது. இதற்கு உபயம் செய்பவர்களுக்கு 80G வரி விலக்கு உண்டு.

***வருநாள் பழுதற்று வாழும் வகையதில் மன்னுவமே!***

---

**Contributions and Donations may be made to :**

**For 100 Day Uthsavams and Stotra s Publications - SEVA TRUST**, A/C No.409010003775, Kotak Mahindra Bank, Villivakkam Branch, Chennai - 49. IFSC Code: KKBK0008486.

**For Souvenir and Sri Desika Seva Special Editions - Seva Swamy Memorial Foundation** , Account No.168505000221, ICICI Bank, Chennai Harrington Road Branch, IFSC Code - ICIC0001685

For more details contact : No.10/2, Lakshmipuram 2nd Street, Villivakkam, Chennai - 600049. Phone : 044-26180481 / 9841046264 / 9283229550 / 8754447367.



# ஸேவா ஸ்வாமி -100

தம் வாழ்நாள் முழுவதும் தேசிக ஸேவையையே உயிர் மூச்சாகக் கொண்டு, அல்லும் பகலும் தேசிக தர்சன ப்ரசாரத்தையே லக்ஷ்யமாகக் கொண்டு, மணிமண்டபத்தை ஏற்படுத்தி, நித்ய ஆராதனங்களும், உத்ஸவங்களும் நடத்தியது மட்டுமல்லாமல், ஸ்ரீ தேசிக ஸேவா மாதப் பத்ரிகை, ஸ்ரீ வேதாந்த தேசிக ஆராய்ச்சி மையம், ஸ்ரீ தேசிக தர்சன பஞ்சாங்கம் என பல்வேறு விதங்களில் தேசிக ப்ரசாரத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, பழுதிலாத் தொண்டு புரிந்த ஸேவா ஸ்வாமியின் நூறாவது ஆண்டு உத்ஸவம் தொடங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**ஸேவா ஸ்வாமி மாஸ திருநக்ஷத்ர உத்ஸவம் (ஐப்பசி - சித்திரை)**

சித்தரை மாதம் முதல் தொடர்ந்து நடைபெற்று வரும் ஸேவா ஸ்வாமியின் மாஸ திருநக்ஷத்ர உத்ஸவத்தின் தொடர்ச்சியாக கடந்த ஐப்பசி மாஸ சித்ரா நக்ஷத்ர உத்ஸவம் மணிமண்டபத்தில் பரிமுகன் திருவடிவாரத்தில் 25-10-2022 அன்று காலையில் நடைபெற்றது. அன்று ஸூர்ய க்ரஹமானபடியால், பெருமாள் திருவாராதனம் சீக்கிரமே நடைபெற்று, பெருமாள், ஆசார்யன் ஸம்பாவனை நடைபெற்று, கோஷ்டியினருக்கு தீர்த்த ப்ரஸாதமும் வழங்கப்பட்டது.

---

# வேண்டுகோள்

ஸேவா ஸ்வாமியின் நூற்றாண்டு விழாவை ஒட்டி, அவருடைய பல படைப்புக்கள் வெளியிடப்படவிருக்கின்றன. 1948 முதல் 2001 வரை, 50 வருடங்களுக்கும மேலாக அவரால் வெளியிடப்பட்ட, ஸேவா பத்ரிகை, பல்வேறு மலர்களில் அவர் அருளிய வ்யாஸங்கள் மற்றும் வெவ்வேறு கால கட்டங்களில் அவர் அருளிய நூல்கள் ஆகியவற்றைத் தொகுத்து வெளியிடவிருக்கிறோம். அவருடைய படைப்புகள் எதுவாக இருந்தாலும் குறிப்பாக 30 வருடங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட நூல்களை எங்களுக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம். மேலும் விவரங்களுக்கு 9841046264 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

# இரு கையும் கூப்பி அழைக்கிறோம்!

ஸேவா ஸ்வாமி தமது வாழ்நாளில் ஆற்றிய தொண்டுகள் பன்முகமானது. 50 வருடங்களுக்கும் மேலாக அவருடைய பழுதிலாத் தொண்டுகள் பலப்பல. 1946 ஆம் ஆண்டு தொடங்கி 1982 ஆம் ஆண்டு வரை 36 வருஷ காலம் ஸம்ஸ்க்ருத ஆசிரியராக, சென்னை சுத்தாத்வைத வைணவப் பள்ளியில் பணி புரிந்து பல நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு ஸம்ஸ்க்ருத அறிவை போதித்தது முதற் கொண்டு அவர் வாழ்நாள் தொண்டு தன்னிகரில்லாதது. பின்னர் 1948ஆம் ஆண்டு தமது 25வது வயதில் ஸம்ப்ரதாயத் தொண்டை, ஸ்ரீ தேசிக ஸேவா என்ற பத்ரிகையின் மூலம் தொடங்கினார். அதற்குப் பிறகு, 50 வருஷ காலத்திற்கும் மேலாக, தம் எழுத்துக்கள் மூலமாகவும், உபந்யாஸங்கள் மூலமாகவும், ஸ்வாமி தேசிகன் 7வது நூற்றாண்டை சிறப்பாகக் கொண்டாடியதில முக்கியப் பங்காற்றியும், பின்னர் மணிமண்டபத்தை ஸ்தாபித்து பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு தேசிக பக்தியை வளர்த்த விதத்திலும் ஸ்வாமியின் தொண்டு வார்த்தையில் அடங்காதது. தனது முதிய வயதிலும், ஸ்ரீ வேதாந்த தேசிக ஆராய்ச்சி மையத்தை ஏற்படுத்தி, இளைஞர்களுக்கு வழிகாட்டும் விதமாக பல திட்டங்களை செயல்படுத்தியவர்.

இந்த மஹானுடைய நூற்றாண்டு விழா, ஓராண்டு விழாவாக தொடங்கப்பட்டு, பெரும் விழாவாக வரும் மாதங்களில் நடைபெறவிருக்கிறது. ஸேவா ஸ்வாமியிடம் பழகியவர்களை, பல்வேறு துறையைச் சேர்ந்தவர்களை நூற்றாண்டு விழாவில் பங்குபெற இயன்றவரை அணுகி வருகிறோம். இந்த வேளையில், அவரிடம் ஆச்ரயித்த சிஷ்யர்கள், ப்ரதிபன்னர்கள், பழகிய வித்வான்கள், ஸஹாக்கள் என அனைவரையும் ஸ்வாமியின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம். ஸ்வாமியின் நூற்றாண்டு விழாவைப் பற்றி அறிந்தவர்கள், தம்மைச் சேர்ந்தவர்களுக்கு தெரியப்படுத்தி ஸ்வாமியின் நூற்றாண்டு விழாவை, தீதிலா நல்லோர் திரளாக வந்திருந்து உத்ஸவத்தை நடத்தி சிறப்பிக்குமாறு இருகையும் கூப்பி அழைக்கிறோம்,

# SRI SEVA SWAMY
# CENTENARY CELEBRATIONS

## 100 DAY CELEBRATIONS THREE GRAND FESTIVAL

You may all know that the year-on celebration of our Great Acharya, DesikaBaktharatnam, Sri SevaSwamy is being conducted in a grand manner. The monthly celebration is being organised in each member of SevaSwamy family on Chitrai Star by conducting Veda, Prabandha, sthotra parayana and thadhiyaradhana for the Parayana swamigal.

In continuation of monthly celebrations, a 100-day utsavam is being organised from 18th December 2022, which coincides with the “Ongi” pasuram of Margazhi month, reflecting the yeoman’s services by Sri SevaSwamy to the Desika Sampradhaya.

**Why 100-day celebrations?**

1. To intimate that it’s the Centenary of Sri SevaSwamy, ie. 100th Thirunakshatram.

2. SwamyDesika’s 7th Centenary was celebrated in for 90 days in which Sri SevaSwamy had very important role to play. He had initiated and published Sri DesikaStotram and Prabandham totalling to more than 50, with his commentary each in houses of such Philanthropists. With a view to follow his footsteps, it is planned to re-print the Stotram and Prabandham of Swamy Desika, with Sri SevaSwamy commentaries and also the original works of Sri SevaSwamy in the houses of philanthropists during the 100 day celebrations. The list of such stotras to be published is attached.

**Appeal**

Srivaishnavites and the followers of Swamy Desika and Sri Seva Swamy and other philanthropists can volunteer to public one stotram / prabandham in each of their houses, on any day from Dec 18, 2022 to March 26, 2023.

- The cost of publication of each book is estimated at Rs.25000/-.
- The book and the date can be selected by the donors
- In case of inconvenience at home, the function can be organised in Manimandapam.
- The book will be published on the date intimated by them at their house. 100 copies of such book will be given to them for distribution among their known ones.
- The donation to such publication will have exemption u/S 80-G of Income-tax Act.
- The payment may be made through NEFT transfer or cheque to **SEVA TRUST,** A/c No.409010003775, Kotak Mahindra Bank, Villivakkam Branch, Chennai 600049. ISFC: KKBK0008486
- The details of the book selected, date, payment details along with a brief of their family and the Acharya to which they belong, like Ahobila Mutt / Ashramam, may be furnished in the form appended hereto.

NAME :

ADDRESS WITH DETAILS OF PHONE NUMBER, MOBILE:

EMAIL ID. :

GOTHRAM :

ACHARYA (WHETHER BELONGS TO AHOBILA MUTT, ASHRAMAM, OR DETILS OF OTHER ACHARYA, IF SWAYAMACHARYA) :

BRIEF ABOUT SELF AND FAMILY :

BOOK SELECTED WITH DATE OF FUNCTION TO BE ORGANISED :

DETAILS OF PAYMENT MADE (CHEQUE/NEFT/OTHERS) :WHETHER 80-G EXEMPTION IS OPTED :

## LIST OF BOOKS TO BE PUBLISHED

Sri HayagreevaSthotram (B)
VaradharajaPanchasath (B)
Ashtabujashtakam
Kamasikashtakam
SoshasayudhaSthotram
MummaniKovai
Sara Sangraham
Abeedistavam (B)
AharaNiyamam
Vairagya Panchagam
Duvayachurukku
Sri DesikashtothraSadam
Thiruchinnamalai (B)
RahasyaSigamani
Paramapadasobanam
Godhastuti (B)
Amruthasvadhini
Nyasadasakam
Dayasatakam (B)
PradhanaSadakam
DhehaleesaStuti
Gopalavimsati (B)
VegaseduSthotram
DevanayagaPanchasath
Bhoostuti (B)
BagavatDyanaSobanam (B)
Nyasa Thilakam
Sudarsanashtakam (B)
DasavataraSthotram (B)
Thatvamuktakalabam
AdhikaraSangraham
Navamanimalai
Prarthanashtakam
Thatvamatrukai
UpakaraSangraham
VedanthaDesikaOdam
Amrutaranjini
HastigiriMahathmyam (B)
RahasyaNavaneetham
ThatvaNavaneetham
DesikaGatyam
Sristuthi (B)
Anjali Vaibhavam
Pillaiandathi (B)
SampradhayaParisuddhi
ThirumandiraChurukku
Arthapanchagam
GeetharthaSangraham
Prabandhasaram
Adaikalapatthu
SrivaishnavaDinasari
Pannirunamam
AchutaSatakam
MahaveeraVaibavam (B)
Garuda Thandakam
Garuda Panchasath
YathirajaSapthati (B)
Garuda Panchasath
YathirajaSapthati (B)

**Sri Seva Swami Works**

DamodaraSuprabatham
LakshmihayagreevaSuprabatham
Sri lakshmihayavadhanaPanchasath(P)
LakshmihayagreevanakshatraMaliga
Kala KalanaMaliga
LakshmihayagreevaMangalam
SrilakshmiPanchasath
SrilakshmiNrusimhaPanchasath(P)
Sri KothandaramaPanchasath
Sri KadikachalaSthavam
GodaSthotram
PadmavathiSthotram (B)
SowbagyalakshmiSthotram (B)
LakshminarayanaSthotram
HanumathPanchasath (Poorva)
AkshayaAradhanam

Note: B: Already booked by sponsors
P: Already printed during Sri SevaSwamy monthly thirunakshatraUtsavam

# SRI SEVA SWAMY CENTENARY CELEBRATIONS 2022-23

## (YEAR ON CELEBRATIONS)

The philanthropists in Srivaishnava Sampradhaya are well aware about Sri SevaSwamy who adorned the group which rendered service to Sri Desika Sampradhaya during the past and early part of this century. He was admired to be the re-incarnation of Swamy Desika and praised as the best among the scholars who popularised SwamyDesika and his works to be people of the country. He lived for the sake of service to the Sampradhaya of Swami Desika never minding about his financial ill-health which surrounded him with a family of 9 children.

His dedication and sincerity to the services of Sri DesikaSampradhaya can be authenticated by his yeoman's service either during the 90day celebrations of the $7^{th}$ Centenary of Swami Desika by publishing 50 of Swami Desika works with his commentary in houses of each of the philanthropists, or by publishing a monthly journal, SEVA through which he enlightened many with his high class commentary on the Sri Desikastotra, etc or being the first to publish Almanac for the use of Srivaishnavites or for his untiring services in publication of Swami Desika works in different languages, or by forming a place, Manimandapam, for conducting Aradhana to Sri LaskshmiHayagreeva and Swami Desika and to popularising the works of Sri Desika through Pravachans, Kalakshepa, etc or by the admiration and praise by Acharyas of popular Mutts, Scholars, etc or by the Awards that adorned him with the highest Award concurred by President of India for his services. It was but natural for him to be the great scholar and Acharya as he was born in the clan of Sri Appullar who was the Acharya of Swami Desika, which provided great acharyas like Thirukudanthai Desikan.

We are to celebrate the Centenary of such a great Scholar and Acharya who was very popular as Sri SEVA Swamy. The Celebration is

being conducted on Year-on basis with the family members of Sri SevaSwamy organising the monthly event at each of their houses on the day of his Star, ie. Chitirai, wherein Veda, Prabanda, Stotra are being chanted followed by Thadhiyaradhana to the participants.

The Centenary is being celebrated as Three Grand Festivals. The **first** among them is coincidentally, Swami DesikaThirunakshatram which was celebrated for 10 days during the month of Puratasi, along with the navarathriutsavam.

The **second phase** is a 100-day celebrations starting from December 18, 2022. During this phase, as a mark of bringing back the moments of the 90-day celebrations conducted during the 7th Centenary of Swami Desikan, wherein in Sri SevaSwamy played very special and important role, and following his footsteps, it is proposed to re-publish the works of Sri Swami Desikan and the original works of Sri SevaSwamy, in houses of each of the philanthropists. It is requested that the philanthropists may participate in the event and sponsor for publication of the books, by selecting each book per donor. The cost of publication of each book is estimated at Rs.25000/-.The book and the date can be selected by the donors. In case of inconvenience at home, the function can be organised in Manimandapam. The book will be published on the date intimated by them at their house. 100 copies of such book will be given to them for distribution among their known ones. The donation to such publication will have exemption u/S 80-G of Income-tax Act. The payment may be made through NEFT transfer to **SEVA TRUST,** A/c No.409010003775, Kotak Mahindra Bank, Villivakkam Branch, Chennai 600049. ISFC: KKBK0008486.

The **third** phase, grand finale, will be conducted from March 30, 2023 by organising

- Veda, prabandha, ithihasa, purana, geetha, sahasranama, stotrapataparayanam

- Orginasing Seminar (Sathas) each for Scholars in the Sampradhaya, Scholars in regular walk of life, Bruhaspatis, DivyaPrabandha Scholars, Scholars in Agama, Women Scholars, Musicians, patrons in Sampradhaya, etc.

**APPEAL**

It is estimated that about Rs.25 lakhs will be required for completing the above task though it is nothing before the services rendered by Sri SevaSwamy to the Sampradhaya.

It is hereby appealed to the like-minded philanthropists, Srivaishnavites, to participate in this Centenary Celebration in some way or other with contributions of their might and get the blessings of Sri SevaSwamy and other Acharya and Sri Lakshmi Hayagreeva adorning the Manimandapam.

The donations/offerings may be sent to

**SEVA TRUST,** A/c No.409010003775, Kotak Mahindra Bank, Villivakkam Branch, Chennai 600049. ISFC: KKBK0008486

---

## கார்த்திகை மாதம்

திருமங்கை மன்னனும், திருப்பாணாழ்வாரும் அவதரித்த மாதம். கைசிக ஏகாதசி இந்த மாதத்தில் தான். தேவனார்விளாகம் அழகிய சிங்கர் என்று போற்றப்படும் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வீரராகவ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் (43வது பட்டம்) மற்றும் 45ம் பட்டம் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ நாராயண யதீந்த்ர மஹாதேசிகன் அவதரித்தது இந்த மாதத்தில் தான். தவிரவும், இது 'தாமோதர' மாதம். உரலில் கட்டுண்டவன் 'தாமோதரன்'. ஸ்ரீ ஸேவா ஸ்வாமி, கார்த்திகை மாதமான இதைத் தாமோதர மாதம் என்று கொண்டாடி,

ஹிம்ஸாகரம் வ்ருஸ்சிக ரூப மத்தா
ச்ருதி ப்ரதீபோ மதுமாஜகாந ।
ஸ்கார்த்திகேயாதி நுதஸ் ஸதோர்ஜோ
தாமோதரோ ந: ப்ரததாநு பத்ரம் ॥ என்று ச்லோகமிட்டுள்ளார்.

# திருக்கார்த்திகைத் திரு

### திருமங்கையாழ்வார்

அறிவு தரும் பெரிய திருமொழி தப்பாமல்
ஆயிரத்தோடெண் பத்து நாலு பாட்டும்
குறிய தொரு தாண்டக நாலைந் தாறைந்தும்
குலாநெடுந் தாண்டக மெழு கூற்றிருக்கையொன்றும்
சிறிய மடற்பாட்டு முப்பத்தெட்டிரண்டும்
சீர் பெரிய மடலதனிற் பாட்டெழுபத்தெட்டும்
இறையவனே ! கார்த்திகையில் கார்த்திகை நாள்
எழிற் குறையல் வரு கலியா விரங்கு நீயே !

### நம்பாண நாதன்

உலகறிய மலிபுகழ் கார்த்திகை மாதத்தில்
உரோகிணி நாள் உறந்தை வளம் பதியிற்றுோன்றி
தலமளந்த தென்னரங்கர் பாலுலோக
சாரங்க மாமுனி தோள் தனிலே வந்து
பலமறையின் பொருளாற் பாண் பெருமாளே நீ
பாதாதி கேசமதாய்ப் பாடித்தந்த
சொலவமலனுதி பிரான் பத்துப் பாட்டும்
சோராமல் எனக்கருள் செய் துலங்க நீயே

## கார்த்திகை மாத முக்கிய தினங்கள்

| | | |
|---|---|---|
| 17-11-2022 | வியாழன் | முடவன் முழுக்கு, மாதப் பிறப்பு |
| 20-11-2022 | ஞாயிறு | ஏகாதசி |
| 23-11-2022 | புதன் | ஸர்வ அமாவாஸ்யை |
| 24-11-2022 | வியாழன் | தாத தேசிகன் |
| 27-11-2022 | ஞாயிறு | 43ம் பட்டம் அழகிய சிங்கர் |
| 29-11-2022 | செவ்வாய் | ச்ரவணம் |
| 02-12-2022 | வெள்ளி | 45ம் பட்டம் அழகிய சிங்கர் |
| 04-12-2022 | ஞாயிறு | கைசிக ஏகாதசி |
| 07-12-2022 | புதன் | வைகானஸ தீபம் |
| | | திருமங்கையாழ்வார், ஸ்ரீநிதி ஸ்வாமி |
| 08-12-2022 | வியாழன் | ஸ்ரீ பாஞ்சராத்ர தீபம், திருப்பாணாழ்வார் |

# இருகை கூப்பி உரைப்போம் (5)

(அக்டோபர் மாத இதழின் தொடர்ச்சி)

## புண்ணியனார் புகழனைத்தும் புகழுவோமே!

ஸ்ரீமதி ஹேமா ராஜகோபாலன், பெங்களூரு

அடுத்து ஸ்ரீஸேவா ஸ்வாமியின் க்ரந்த லேகனம். ஸ்வாமியின் எழுத்தாற்றலைக் காட்டும் கண்ணாடியென விளங்குபவை அவர் படைத்தருளிய நூல்களாகும். நாவன்மை மட்டுமின்றி எழுத்தாற்றலையும் பெற்றிருந்தார் என்பது நாடறிந்த விஷயம். இது பொன்மலர் நாற்றமுடைத்து என்பது போலாகும். இத்தகு எழுத்தாற்றலே ஒருவரை சிரஞ்ஜீவியாக விளங்கச் செய்கிறது. ஆம்! பகவத் பாஷ்யகாரரும், ஸ்வாமி தேசிகனும் இன்றும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் அது அவர்களின் படைப்புக்களாலேயே அன்றோ!. வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் விரகால் அடியோம் உள்ளத்தெழுதியது ஓலையில் இட்டனம் என்பது ஸ்வாமி தேசிகனின் மெய்மை(யான) பெருவார்த்தையாகும்! பரிமுகனாரால் தாம் பெற்ற ஞானத்தையன்றோ ஏட்டில் எழுதிவைத்தார்! ஒன்றல்ல, இரண்டல்ல அவை ஓராயிரமும் இருக்கலாம், ஆனால் நம் பாக்ய குறைவினால் காலவெள்ளத்தில் கரைந்து போனவை, களவு போனவை, காணாமற்போனவை, களையப்பட்டவை என்னும் பல காரணங்களால் நாம் பெற்றதைக்காட்டிலும் இழந்ததே அதிகமெனத் தோன்றும்! இதை எண்ணுகையில் மனதில் வருத்தம் உண்டானாலும் கிடைத்தவையே இவ்விருள் தருமா ஞாலத்திலே வாழும் ஒவ்வொரு நாளும் மதிநிறைந்த நன்னாள் ஆவதற்கும் வருநாள் பழுதற்று வாழ்வதற்கும் நமக்குப் போதுமானதாகும்! இதனாலன்றோ நம் பெரியோர்களும் ஓரொன்றுதானே அமையாதோ என்று போற்றியதுடன் கிடைத்த நூல்களை கசடற கற்பதற்கு ஒரு மனித ஆயுட்காலம் போதா என்றும் அறிந்து அறிவித்தனர், நல்ல வேளை, எழுதிவைத்தனரே! என்று நமக்குத் தோன்றுகிறது! அவர்கள் அருளிய காலக்ஷேபங்களும் உபந்யாஸங்களும் பின்னானாருக்கு எட்டாக்கனியாகின. ஒலிப்பதிவு என்னும் விஞ்ஞான அற்புதம் விளைந்தது தற்காலத்திலேதானே! எனவே அக்காலத்தில் அவர்கள் எழுதி

வைத்தவையே இன்று நமக்கு நம் வீட்டிலேயே கிடைக்கும் அற்புதப் பொற்புதையலாகும்!.

ஸ்ரீ பாஷ்யகாரரின் நூல்களை அனுபவிப்பதிலேயே தம் இளமைக்காலத்தைக் கழித்ததாக நிர்விஷ்டம் யதிஸார்வபௌம வசஸாம் ஆவ்ருத்திபர் யௌவனம் என்று மகிழ்ச்சியோடு அறிவித்தவர் ஸ்வாமி தேசிகன். அதுபோல் ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்த நூல்களிலேயே தம் வாழ்நாள் முழுவதையும் வாசித்தும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது என்றபடி மகிழ்ச்சியுடன் கழித்தவர் ஸ்ரீஸேவா ஸ்வாமியாகும். ஆசார்ய ஸார்வபௌமரின் அமுதவாக்கில் அமிழ்ந்து தாம் அள்ளியெடுத்த நல்முத்துக்களையெல்லாம் நம்போல்வாரும் பெற்று மகிழும் வண்ணம் ஏடுகளில் பதித்து வைத்தது ஸ்வாமி செய்த அரும்செயலாகும். நமக்கும் இவை வஸ்து பைதாமஹம் தனம் என்றபடி கிடைத்த பரம்பரை சொத்தாகும்! குருபரம்பரையினின்றும் தாம் பெற்ற இச்சொத்தினை எழுத்துக்களாக்கி ஏட்டில் பதித்து வைத்து நமக்கும் வழங்கினார் ஸ்ரீ ஸேவா ஸ்வாமி! அவர் எழுதியருளிய நூல்களைப் பற்றி சற்றே விரிவாகக் காண்போம்.

ஸ்வாமியின் படைப்புகள் பன்முகமானவை . ஞானானந்தமயனாகிய ஸ்ரீஹயக்ரீவனை ஆராதித்தார். அவரருளால் தான் பெற்ற ஞானத்தைப் பலரும் பெற உதவினார். இந்த பாகவத ஸேவையே ஸேவா என்னும் திருநாமத்தை அவருக்குப் பொருந்துவதாக ஆக்கியது என்பதை உறுதியாகச் சொல்லாம். பாகவத ஸேவையே பரமன் ஸேவை. ஞான விநியோகமே பரிமுகன் ஸேவையாகும். அனைவருக்கும் ஞான விகாஸத்தை ஏற்படுத்துவதற்குத் தம் எழுதுகோலையே உகந்த கருவியாகக் கொண்டார். அங்குள்யக்ர வ்யாபாரம்!!

பன்முகங்களான பல துறைகளில் படிந்து குடைந்து நீராடி தமக்கென ஒரு பாணியை அமைத்துக்கொண்டு பல நூல்களையும் எழுதினார். இவருடைய எழுத்தாற்றலைப் பற்றி பேசுகையில் அதை இரு பெரும் பிரிவுகளாக பிரித்துப் பேசலாம். தாம் ஒரு உபய வேதாந்தி என்பதற்கிணங்க வடமொழி, தமிழ் என்ற இரண்டிலும் கவிதைகள் படைக்கும் ஆற்றல் பெற்றிருந்தார். வ்யாஸம் எனப்படும்

உரைநடையில் எழுதும் திறமையும் நிறையவே உண்டு. ஆக, பேச்சாற்றலுடன் உரைநடை கவிதைநடை என இருபிரிவுகளிலும் எழுதும் வல்லவராகவும் திகழ்ந்தார். கேட்டவர், படித்தவர் என இரு சாராரையும் தம்பால் ஈர்க்கவல்ல திறமை! தெரிந்து கொள்ளவேண்டிய அரிய விஷயங்களை மிகத் தெளிவாகவும் எளிதாகவும் அனைத்துக்கும் மேலாக உள்ளார்ந்த நகைச்சுவையுடன் விளக்கவல்லவர் என்பதைப் பல எடுத்துக்காட்டுகளுடன் சொல்லமுடியும்! பேச்சாற்றல் என்பதற்கு அவருடைய திருப்பாவை உபந்யாஸங்களைச் சொல்லலாம். உதாரணத்திற்கு 1993-94ம் ஆண்டு மேலமாம்பலம் ஸ்ரீஸத்யநாராயணர் திருக்கோவிலில் நடந்த திருப்பாவை உபந்யாஸத்தைக் கூறலாம். பந்தல் நிறைந்தபின் அதைத்தாண்டி தெருவிலும் குழுமியிருந்த பக்தர்கள் கூட்டம்! முதியவர்கள் மட்டுமின்றி அலுவலகம் செல்வோர், இல்லத்தரசிகள், இளைஞர்கள் எனப்பல வயதினரும் அமரக்கூட இடமின்றி நின்றபடியே செவியுணவின் சுவை கொண்டு மகிழ்ந்து எழுதுசித்திரம் போல் நின்றனர் என்பதை இன்றும் மறக்கவியலா!

சிறந்த புலவராகவும் எழுத்தாளராகவும் விளங்கியவர் நம் ஸ்வாமி. இவ்விரண்டுக்கும் உரிய இலக்கணத்தை நம் பெரியோர்கள் வகுத்திருந்த முறை வழுவாமல் கையாண்டு தம் படைப்புகளைப் படைத்தார் என்பதும் குறிப்படத்தக்க ஒரு அம்சமாகும்.

கவியென்பான் யார் என்ற கேள்விக்குச் சான்றோர் பலர் விளக்கம் தந்தனர். ஸ்வாமி தேசிகன் கவி என்னும் இச்சொல்லுக்குத் தரும் விளக்கமாவது -

˙ஸ கவி: கத்யதே ஸ்ரஷ்டா ரமதே யத்ர பாரதீ ந
ரஸ பாவை பராக்யாலங்காரைர்குணோதகை ।।

இதன் பொருளாவது- ˙படைக்கும் கடவுளாகிய நான்முகனைப் போன்றவனே கவி! அவன் படைப்பைக் காட்டிலும் இக்கவியின் படைப்பு குறைந்ததல்ல! ரஸங்கள் பாவங்கள், அலங்காரங்கள், குணங்கள் இவை நிரம்பிய ஸரஸ்வதி எவனிடம் தானாகவே இன்புற்று விளங்குகிறாளோ அவனே கவியெனப்படுகிறான்˙ என்பதாகும்.

மேலும் கவியினுடைய பெருமையைப்பற்றி ஒரு பழமொழி பழங்காலத்தில் பேசப்பட்டது!

'ஜாதே ஜகதி வால்மீகௌ கவிரித்யபிதாபவத் ।
கவீ இதி த்தோ வ்யாஸே கவயஸ்த்விதி தண்டினி ।।

'கவியென்னும் சொல் நெடுநாள்வரை வால்மீகீ ஒருவரையே உணர்த்தும் விதமாக ஏகவசனத்தில் சொல்லப்பட்டது. வ்யாஸர் தோன்றியதும் அச்சொல்லில் த்வி வசனம் தோன்றியது, தண்டி என்னும் மஹாகவி தோன்றியதும் அச்சொல் பஹுவசனத்தையும் பெற்றுவிட்ட்து' என்று பொருள்படும் இந்த ச்லோகத்தை வடமொழி வல்லவர்கள் அழகாகக் கூறுவதுண்டு. கவிச்ரேஷ்டர்களாக விளங்கிய வால்மீகீ மற்றும் வ்யாஸரைத் துதிக்கையில் ஸ்வாமி தேசிகன் வாக்தேவியை (கோதா தேவியை) பூஜித்து இத்திறமையை இவர்கள் பெற்றனர் என்று போற்றுவார்! வாசம் ப்ரஸந்ந மதுராம் மம ஸம்விதேஹி என்று கோதா தேவியை ப்ரார்த்தித்துப் பெரும் கவியெனத் திகழ்ந்தவர் ஸ்வாமி தேசிகன்!

மணிமண்டபத்தின் ஞான பஞ்சாயதனத்தில் ஸ்ரீவாகீசமூர்த்தியையும் வாக்கருளும் கோதாதேவியையும் கவிஸார்வபௌமனையும் அனவரதம் ஆராதித்த நம் ஸேவா ஸ்வாமியும் அவர்களுடைய அனுக்ரஹ விசேஷத்தால் ஒரு கவிச்ரேஷ்டராக விளங்கினார். மேலும் ச்லேஷ யமக சக்ரவர்த்தி என்று சான்றோர்களால் புகழப்பெற்ற அரசாணிப்பாலை ஸ்ரீ வேங்கடாத்வரி ஸ்வாமியின் வம்சத்தில் தோன்றியதன் காரணமாகத் தம் குலதனமாக கவி படைக்கும் ஆற்றலையும் பெற்றிருந்தார். கவிச்சக்ரவர்த்தி என்று போற்றப்பெற்ற கம்பனும் தம் ராமாயணத்தில், 'ஒரு கவிதை என்றால் அது எப்படி இருக்கவேண்டும்' என்பதை வர்ணிப்பது அழகு! ஸூர்ப்பணகை படலத்தில் கோதாவரி நதியை வர்ணிக்கையில்

புவியினுக்கு அணி ஆய் ஆன்ற பொருள் புலத்திற்று ஆகி
அவிஅகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறி அளாவி
சவி உறத் தெளிந்து தண்ணெண் ஒழுக்கமும் தழுவி சான்றோர்
கவி எனக் கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார்.

என்று பாடுகிறார். இதன்படி ஒரு கவிதையில் அல்லது செய்யுளில் (ஒரு ச்லோகத்திலும் கூட) ஒளி, தெளிவு, தண்மை, ஒழுக்கம் இவை நான்கும் இருக்கவேண்டும் என்பதை அழகாக உணர்த்துகிறார். இதன்படி ஸ்ரீ ஸேவா ஸ்வாமியின் கவிதைகளும் கட்டுரைகளும் அமைந்திருப்பதை சற்றே விரிவாகக் காணலாம்

## ஸ்ரீ ஸேவா ஸ்வாமியின் கவிதைகள்

ஸ்வாமி தேசிகனின் படைப்புகளுள் ஸ்ரீஸேவா ஸ்வாமியை வெகுவாகக் கவர்ந்தவை அவருடைய ஸ்தோத்ரங்கள் என்று கூறலாம். பத்தர்களாகிய நாம் வெறும் பதர்களாகி விடாமல் பக்தர்களாய் வளர இவை பெரிதும் உதவுகின்றன என்று போற்றுவார். தம் உபந்யாஸம் காலக்ஷேபம் மற்றும் எழுத்துக்களிலும் பல இடங்களிலும் இந்த ஸ்தோத்ரங்களை மேற்கோளாகக் காட்டுவதுடன் அதன் பொருளாழத்தில் தன்னைக் கவர்ந்த இடங்களையும் ஆர்வத்துடன் வெகு அழகாகக் குறிப்பிடுவதுண்டு. (இதுபற்றி ஆசார்ய அனுக்ரஹத்தால் இத்தொடரில் வ்யாக்யான வைகரி என்னும் தலைப்பில் எழுதுகையில் சிற்சில எழுத்துக்காட்டுகள் காட்டப் படும்). தாம் சென்னை வில்லிவாக்கத்தில் வாஸம் செய்ததையொட்டி அவ்விடத்தில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஸௌம்ய தாமோதரப் பெருமாள் விஷயமாக ஸுப்ரபாதம் ஒன்றை இயற்றி ஸமர்ப்பித்தார். தொடர்ந்து தம் ஆராத்ய தெய்வமாகிய ஸ்ரீஹயக்ரீவன் விஷயமாக ஹயக்ரீவ ஸுப்ரபாதம், ஹயவதன மங்களம், ஹயவதன நக்ஷத்ர மாலிகா, காயத்ரீ வர்ணமாலா ஸ்தவம், கலாகலன மாலிகா, ஹயவதன பஞ்சாசத், ஹயவதன ஸ்தோத்ரம் ஆகியவற்றை இயற்றி ஸமர்ப்பித்து தன்யரானார். மேலும் கோதா ஸ்தோத்ரம், ஸ்ரீகோதண்டராம பஞ்சாசத் போன்ற 25க்கும் மேற்பட்ட ஸ்தோத்ரங்களை அருளிச் செய்தார். இங்ஙனம் சிறிதும் பெரியதுமாகிய பல ஸ்தோத்ரங்கள் இயற்றியதுடன் காவியங்கள் என்று சொல்லலாம்படி இரு பெரிய நூல்களும் அருளிச்செய்தார்.

ஸ்ரீவேங்கடநாதீயம் என்னும் பெயரில் ஆயிரத்தெட்டு ச்லோகங்கள் கொண்ட ஒரு ஸ்ரீஸூக்தி! ஸ்வாமி தேசிகனின் தயாசதகத்தை பின்பற்றிய இந்நூலை பத்து சதகங்களாகவும் ஒவ்வொரு சதகங்களைவும் பத்து பத்து தசகங்களாகவும் அமைத்துள்ளதுடன் பத்தாவது நூறில் ஸம்ஸ்க்ருதத்தின் அக்ஷரங்களை வரிசைப்படி மிக அழகாகப் பொருத்தியுள்ளதும் மேலும் அவையடக்கமாக (நைச்யாநுஸந்தானமாக) அமைந்துள்ள சில ச்லோகங்களும் என இவையனைத்தும் கற்றறிந்த வித்வான்களை ப்ரமிக்கவைக்கும் தன்மையவை.

மற்றொரு படைப்பு ஸ்ரீவரதாபிதான ஸஹஸ்ரம் என்பது, விச்வம் என்று தொடங்கி ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திலுள்ள ஆயிரம் திருநாமங்களும் காஞ்சி பேரருளானையே குறிப்பதாகப் பாடியுள்ளார். திருமலை தெய்வத்தின்பாலும், வேழமலை தெய்வத்தின்பாலும் தாம் கொண்டிருந்த அளவற்ற பக்தியின் வெளிப்பாடாக அமைந்துள்ள இவ்விரு நூல்களையும் அழகான காவ்ய நூல்கள் என்று ஆன்றோர்கள் பெரிதும் போற்றுகின்றனர்.

தாம் ஆராதித்த ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவர் விஷயமாக அச்வினி தொடக்கமாக 27 நக்ஷத்ரங்களையும் 27 ச்லோகங்களாக்கி நக்ஷத்ர மாலிகா என்னும் அற்புதமான துதிநூலை அவ்வெம்பெருமானின் திருவடிகளில் ஸமர்ப்பித்தார்! அதுபோல் ஸ்வாமி தேசிகனைப் போற்றி ப்ரபவ எனத் தொடங்கி அக்ஷ்ய எனமுடியும் தமிழ் வருடங்களின் 60 திருநாமங்களையும் அமைத்து அக்ஷய ஆராதனம் என்னும் தலைப்பில் இவர் இயற்றியுள்ள ச்லோகங்கள் பண்டித உலகில் பெரும் பாராட்டைப் பெற்றன. இப்படைப்பினை இவர் நிறைவு செய்த விதம் இவருடைய தேசிக பக்திக்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்! அது அமைந்துள்ளவிதம் இதோ!

அக்ஷய: பகவான் அக்ஷயன்.தேசிகரால் அக்ஷயமான பலத்தை அடைந்து நிம்மதியாய் இருக்கும் அவரையே துதித்து அக்ஷயமாயிருப்போம் என்பதாகும்.

ஸ்வாமி தேசிகனின் ஸ்தோத்ரங்களின் பெருமையை பிற மொழியினரும் அறிந்துகொள்ளும் நோக்கத்தில் அவற்றின் உரைகளை மொழிமாற்றம் செய்ததுபோல் திருவாய்மொழி. நாச்சியார் திருமொழி, கண்ணிநுண்சிறுத்தாம்பு, திருக்குறுந்தாண்டகம் போன்ற ப்ரபந்தங்களின் சீர்மையை தமிழ் அறியாத வடமொழி வல்லுநர்களும் அறிந்து உகக்கும் வண்ணம் ஸம்ஸ்க்ருதத்தில் ஸ்வாமி அநுவாதம் செய்துள்ளது செயற்கரிய சிறந்த படைப்புகள் எனலாம்.

இவை ஸ்தோத்ரங்கள் பற்றிய செய்தியாகும். துதிகளாக அமைந்த இவைகளைத் தவிர ஸ்வாமி ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் பல கீர்த்தனைகளும் இயற்றியுள்ளார். இவை பற்றி அடுத்த இதழில் விரிவாகக் காணலாம்

ஸ்வாமி தேசிகன் திருவடிகளே சரணம்.

# உரையாடலில் உலாவரும் உத்தமர்

(ஸ்ரீமதி அமிர்தவல்லி சடகோபன், வில்லிவாக்கம், சென்னை)

ஞான பஞ்சாயதனம் எனும் மணிமண்டபத்தில் ஸ்ரீ ஸேவா ஸ்வாமியின் சதமான மஹோத்ஸவம் நடந்து கொண்டிருக்கிறது. வரும் பங்குனி மாதம் சித்திரை நக்ஷத்ரம் (07.04.2023) அன்று பூர்த்தி பெறுகிறது. அந்த மஹோத்ஸவத்தினைப் பற்றி இரண்டு பெண்களின் சுவையான ஸம்பாஷணையை இவ் வ்யாஸத்தில் காணலாம். இதில் இடம்பெறும் நபர்கள் கற்பனை பாத்திரங்களே. ஏதேனும் பிழையிருப்பன், க்ஷமிக்க பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ ஸேவா ஸ்வாமி நூற்றாண்டு விழா மஹோத்ஸவம் பற்றி இரு பெண்மணிகளின் ஸம்பாஷணை :-

சுபஸ்ரீ :- நமஸ்காரம் மாமி. எப்டியிருக்கேள்? எப்போ ¸US- லிருந்து வந்தேள்? உங்க பொண்ணு அதான் என்னோட ஃப்ரண்ட் ஸ்வேதா எப்படியிருக்கா மாமி?

ரமா மாமி:- போன வாரம் தான் வந்தேன் மா. ஸ்வேதா சௌக்கியமா இருக்கா. ஆமா, நீ எப்படி இருக்கே?..... மணிமண்டபத்தில நடந்த ஸ்வாமி தேசிகன் திருநக்ஷத்ரம், தாயாரோட நவராத்ரி உத்ஸவம் ஃபோட்டோஸ், வீடியோ எல்லாம் பார்த்தேன். ரொம்ப நன்னா இருந்தது. அப்புறம் இங்கே என்ன விசேஷம்?

சுபஸ்ரீ :- நான் நன்னா இருக்கேன் மாமி. உத்ஸவம் எல்லாம் நன்னா நடந்தது. இப்போ ஸ்ரீ ஸேவா ஸ்வாமி நூற்றாண்டு விழா நடந்துண்டு இருக்கு, உங்களுக்கு தெரியுமோல்லியோ ? மாமி .

ரமா மாமி:- ஓ! தெரியுமே. நன்னா ஞாபகம் இருக்கே. அவரோட மாச திருநக்ஷத்ரத்தை கூட கொண்டாடிண்டு இருக்காளே. வர்ற பங்குனி சித்திரை தானே நூறு பூர்த்தியாறது. ஏதாவது விசேஷமா கொண்டாடப் போறாளா ?

சுபஸ்ரீ :- ஆமாம் மாமி. நிறைய கார்யக்ரமம்லாம் இருக்கு. இந்தாங்கோ மாமி, பத்ரிகை .

ரமா மாமி:- (பத்ரிகையை வாங்கிக்கொண்டு.....) ஸ்வாமி தேசிகன் உத்ஸவம் அப்புறம் தாயாரோட நவராத்ரி உத்ஸவத்தையெல்லாம் பார்க்கறச்சே என்னோட அம்மாவோட ஞாபகம் தான் வந்தது. ஸ்வேதாகிட்ட கூட சொல்லிண்டிருந்தேன் இதப் பத்தி.

சுபஸ்ரீ :- எதப் பத்தி மாமி? என்ன விஷயம்? எங்கிட்டயும் சொல்லுங்கோ. நானும் தெரிஞ்சக்கறேனே, மாமி.

ரமா மாமி:- அதுக்கென்ன! பேஷா சொல்றேனே. எங்கம்மா இந்த வில்லிவாக்கத்தில தான் இருந்தா. இங்க தான் பொறந்து வளர்ந்தா. கல்யாணமாகி வேற ஊருக்கு போயிட்டா. ஆனாலும் பிறந்து வளர்ந்த ஊரை அம்மாவால மறக்க முடியல. நாங்க எல்லாரும் சின்னவாளா இருக்கறச்சே, மணிமண்டபத்தைப் பத்தியும், ஸேவா மாமா, ஸேவா மாமான்னு அவரைப் பத்தியும் அடிக்கடி சொல்லிண்டு இருப்பா. அவர் ஸ்வாமி தேசிகன் மேல வச்சிருந்த பக்தியைப் பத்தி ஸ்லாகித்து பேசுவா. எந்த தொழில் நுட்பமும் இல்லாத சமயத்தில், தனி ஒரு மனிஷரா ஸம்ப்ரதாயத்துக்காக எப்படி பாடுபட்டார்ன்னு சொல்லுவா. ஸ்வாமி தேசிகனின் ஸ்தோத்ரங்கள் அப்பறம் தமிழ் ப்ரபந்தங்களுக்குமான வ்யாக்யானங்கள் , ஸ்ரீ தேசிக ஸேவா பத்ரிகை, மணிமண்டபத்தில பெருமாள் நித்யபடி ஆராதனம், மடப்பள்ளி கைங்கர்யம், உபன்யாஸம், காலக்ஷேபம் என விஸ்வரூபம் எடுத்து ஸ்வாமி தேசிகனே பர தெய்வம் ன்னு வாழ்ந்து காட்டியவர்னு சொல்லி சொல்லி ஆச்சர்யப்படுவா . அவரோட நூற்றாண்டு விழா சமயத்தில நாம எல்லாரும் இருக்குறதை நெனைச்சு பெருமையா இருக்கு மா. பேசிண்டே இருக்கறச்சே தான் என்னோட மாமனார் சொன்னதும் ஞாபகம் வர்றது. ஸேவா ஸ்வாமி, ஸ்வாமி தேசிகனின் 700வது திருநக்ஷத்ரத்தின் போது, அதை 90 நாள் உத்ஸவமாக கொண்டாடி, 90 நாள்ல ஸ்வாமி தேசிகனின் ஸ்தோத்ரங்கள், தமிழ் ப்ரபந்தங்களை அவரோட எளிய உரையோட, அம்பதுக்கும் மேற்பட்ட ஸ்ரீ வைஷ்ணவாளோட அகங்கள்ல வெளியிட்டும், இது தவிர, பல நூறு பக்கங்கள் கொண்ட இரு சிறப்பு மலர்களை வெளியிட்டதில முக்கிய பங்காற்றியும் ஸாதனை படைத்தார்னும், இது அவரின் வாழ்நாள் ஸாதனைன்னும் பெருமையோட சொல்லிண்டு இருப்பார்.

சுபஸ்ரீ :- மாமி, நீங்க சொல்றதை கேட்கறச்சே ப்ரமிப்பா இருக்கு. இதை அவரோட திருக்குமாரர்கள் மற்றும் அவர்கிட்ட உபன்யாசங்கள், காலக்ஷேபங்கள் அன்வயித்தவர்கள் சொல்லி கேட்டிருக்கிறோம்.

ரமா மாமி:- ஆமா மா. அவர் நம்மோட ஸம்ப்ரதாயத்திற்காக எவ்வளவு பண்ணியிருக்கார். அவரோட நூற்றாண்டை நாம எல்லாரும் சேர்ந்து கொண்டாடி, அவருக்கு பெருமை சேர்க்கணும். ஸேவா ட்ரஸ்ட் என்னென்ன ஏற்பாடுகள் பண்ணியிருக்கா. உனக்கு எதாவது தெரிஞ்சா சொல்லேன்.

சுபஸ்ரீ :- சொல்றேன் மாமி. உங்களுக்கு டைம் இருக்கா. இருந்தா எங்காம் பக்கத்துல தான் இருக்கு. வாங்கோ பேசலாம்.

ரமா மாமி : - அதுக்கென்ன! கண்டிப்பா இப்பவே வரேனே ! உத்ஸவத்தைப் பத்தி உடனே விவரமா தெரிஞ்சுக்க எனக்கும் ரொம்ப

ஆசையா இருக்கு. நான் வேற என்னோட கண்ணாடிய மறந்து ஆத்திலேயே வச்சுட்டு வந்துட்டேனா. நீ பத்ரிகைல இருக்கறத பாத்து கடகடன்னு அப்டியே சொல்லு மா. ( இவ்வாறு பேசிக்கொண்டே இருவரும் சுபஸ்ரீயின் அகத்தை அடைந்தனர் )

சுபஸ்ரீ :- வாங்கோ மாமி, வாங்கோ . உக்காருங்கோ மாமி. காஃபி , டீ என்ன வேணும் மாமி . சொல்லுங்கோ .

ரமா மாமி :- இப்பல்லாம் காஃபி , டீ ல்லாம் ஒரு வேளை தாம்மா சாப்பிடறேன் . உடம்புக்கு ஒத்துக்க மாட்டேங்கறது . ஏதோ, க்ரீன் டீ ன்றாளே , உடம்புக்கு நல்லதாமே, அத தான் சாப்ட்டுண்டு இருக்கேன். அது இருந்தா சித்த கொடேன். ( சுபஸ்ரீ , மாமி கேட்டதை கொடுத்துட்டு, சில நிமிடங்கள் கழித்து உத்ஸவ விவரத்தினைக் கூற ஆரம்பிக்கிறாள் )

சுபஸ்ரீ :- மாமி , ஸேவா ஸ்வாமி, ஸ்வாமி தேசிகனின் 700 வது திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தை 90 நாட்கள் கொண்டாடினார்னு சொன்னேள் இல்லையா ! இப்போ, ஸேவா ஸ்வாமியோட குடும்பத்துல இருக்கறவா, அவரோட சதமான மஹோத்ஸவத்தை 100 நாள் கொண்டாட முடிவு செஞ்சு, ஸேவார்த்திகள் எல்லார்க்கும் தெரியப்படுத்தினா ! அது என்னென்னன்னு பாக்கலாம் :-

1. ஸ்ரீ ஸேவா ஸ்வாமியோட சதமான உத்ஸவத்தை முப்பெரும் விழாவா கொண்டாட உத்தேசித்திருக்கா. விழாவோட ஆரம்பமா, சுபக்ருத் வருஷமான இந்த வருஷத்தில, ஸ்வாமி தேசிகன் திருநக்ஷத்ரமும், தாயாரோட நவராத்ரி மஹோத்ஸவமும் ஒண்ணா அமைஞ்சு நன்னா நடந்தது. நீங்க கூட சொன்னேளே மாமி, ஃபோட்டோஸ், வீடியோஸ்லாம் பார்த்தேன்னு, அந்த உத்ஸவம் தான்.

2. முப்பெரும் விழாவின் இரண்டாவது அங்கமா, மார்கழி மாசம் ‘ஓங்கி‘ பாசுரத்தில ஆரம்பிச்சு ( மார்கழி சித்திரை - பங்குனி சித்திரை வரை) ( அதாவது Dec 18, 2022 to Apr 7, 2023 ) நூறு நாள் உத்ஸவமா கொண்டாடப்போறா.

3. 100 நாள் உத்ஸவத்துல, ஸேவா ஸ்வாமியோட எளிய தமிழ் உரையோட 50க்கு மேல் புத்தகங்கள் வெளியிட இருக்கா. சில பேர் புஸ்தகத்த செலக்ட் பண்ணி பேர் கொடுத்திருக்கா. இதில கலந்துக்க ஆசைப்படறவா, விவரத்தை ஸேவா ட்ரஸ்ட்ட கேட்டு தெரிஞ்சுக்கலாம் . இதை ஏத்துக்கறவா அவாவா ஆத்திலயோ, இல்லைனா ஸேவா ஸ்வாமி மணிமண்டபத்திலயோ இந்த விழாவை வச்சுக்கலாம். 100 புஸ்தகம் உபயதாராளுக்கு கொடுக்கறத்துக்கு உத்தேசித்திருக்கா.

4. நூற்றாண்டின் நிறைவு விழாவா, 10 நாள் ப்ரஹ்மோத்ஸவமா கொண்டாட தீர்மானிச்சிருக்கா. அந்த பத்து நாள்ல வேதம், திவ்ய ப்ரபந்தம், தேசிக ப்ரபந்தம், இதிஹாச, புராண, கீதை, ஸஹஸ்ர நாம, ஸ்தோத்ர பாட பாராயணங்களோட தினமும் ததீயாராதனமும் ஏற்பாடாகி இருக்கு .

5. அதோட அந்த 10 நாள்ல, ஒவ்வொரு நாளும் வேறவேற துறையில இருக்கற வித்வான்களைல்லாம் கௌரவிக்கப் போறா. (பத்ரிகைலே இருக்கறதை அப்படியே படிக்கறேன், பாருங்கோ மாமி) வித்வத் ஸதஸ், லௌகீக வித்வத் ஸதஸ், ப்ரஹஸ்பதி வித்வத் ஸதஸ், அருளி செயல் வித்வத் ஸதஸ், ஆகம வித்வத் ஸதஸ், ஸ்த்ரீ வித்வத் ஸதஸ். கைங்கர்யபரர்கள், ஸம்ப்ரதாய புரவலர்கள். கூடவே குழந்தைகளுக்கான ஸம்ப்ரதாய போட்டிகளும் நடத்தறதா இருக்கா, மாமி.

6. 08.04.2023 அன்னிக்கு விடாயத்தியோட ஸ்ரீ ஸேவா ஸ்வாமியோட சதமான மஹோத்ஸவம் பூர்த்தியாறது.

ரமா மாமி :- கேக்கறதுக்கே ரொம்ப சந்தோஷமா இருக்கும்மா! எல்லாம் நல்லபடியா நடக்கும். என்னாலானது தெரிஞ்சவாளுக்கெல்லாம் சொல்றேன். பாக்யம் இருக்கவா கலந்துக்கட்டும்!

( இத்துடன் இருவரின் சம்பாஷணை நிறைவடைந்து, ரமா மாமி விடை பெற்றுக்கொண்டு தன் அகம் செல்கிறார் )

**உரையாடல் மூலம் அடியேனுக்கேற்பட்ட அனுபவம் :-**

ஸ்ரீ ஸேவா ஸ்வாமி ' ந தைவம் தேசிகாத் பரம் ' என்று தனது வாழ்நாளை ஸ்வாமி தேசிகனுக்காகவே அர்ப்பணித்து சாதனை புரிந்தவர். ஸ்வாமி தேசிகனின் திருக்குமாரரான குமார வரதாசார்யார் ( ஸ்ரீ நயினாராசார்யார் ) , ஸ்வாமி தேசிகனையே அனைத்துமாக கொண்டு (பித்ரே ப்ரஹ்மோபதேஷ்ட்ரே மே குரவே தைவதாய ச .......வேங்கடேசாய மங்களம் ) என்று வாழ்ந்தவர். அவர் அருளிய நூல்களான பிள்ளையந்தாதி, தேசிக ப்ரபத்தி, தேசிக மங்களம் மற்றும் தேசிக ப்ரார்த்தனாஷ்டகம், அனைத்தும் ஸ்வாமி தேசிகனையே ப்ரதானமாகக் கொண்டு அமைந்தவை. அதனைப்போன்று, ஸ்ரீ ஸேவா ஸ்வாமியும் ' தேசிகனே தேசீயம் ' என்று இருந்து வாழ்ந்து காட்டினார். அவருடைய சதமான மஹோத்ஸவத்தில துவக்க நாளில் (18.12.2022), அவரின் திருமாளிகையில், அவருடைய திருக்குமாரர்களாலேயே முதல் புத்தகமாக, 'பிள்ளையந்தாதி' வெளியிட இருப்பது ஸ்ரீ ஸேவா ஸ்வாமியின் மனோரதத்திற்கு உகந்தாற்போல் அமைந்தது அதிவிசேஷமே!

ஆழ்வார், எம்பெருமானார், ஸ்வாமி தேசிகன் மற்றும் ஆசார்யன் திருவடிகளே சரணம்.

# பகவானின் ப்ரியமஹிஷிகள்

( ஜெ. சடகோபன், வில்லிவாக்கம், சென்னை 49 )

வேதங்கள் பறைசாற்றும் ப்ரஹ்மம் ஸ்ரீமந் நாராயணன். நாராயணனே அனைத்திற்கும் காரணம். அகில புவனங்களும் அவனிடமிருந்தே உண்டாகி அவனிடமே லயமும் ஆகின்றன. அவன் அண்ட சராசரங்களுக்கும் நாதன். அவனில்லாவிடம் அவனியிலில்லை. லீலா விபூதி மற்றும் நித்ய விபூதியான பரமபதத்திற்கும் சொந்தக்காரன். அவனிட்ட வழக்காக உள்ளவர்களே அநேக அநேக ஆயிரமாயிரமாக இருக்கும் ஜீவாத்மாக்கள். இந்த ஆத்மாக்களை அவனுடன் சேர விடாமல் தடுத்து வருவது அவரவர்களின் கர்மாக்கள். இந்த கர்மாக்களை முழுவதுமாக ஒழித்தால் வருவதே நித்யமான ஆனந்தமாகும். இன்பம், சுகம், ஸந்தோஷம் போன்ற பதங்களுக்கு நேர்மறையான பதங்களாக முறையே துன்பம், கஷ்டம், துக்கம் இருப்பதை அனைவரும் அறிவர்.

ஆனால், பரமானந்தமான ப்ரஹ்மானந்தத்திற்கு மேலான ஆனந்தமோ அல்லது பரமபதத்திற்கு இணையான பதமோ கிடையவே கிடையாது. இதனை நாம் நான்மறைகள் மூலமும் வேதாந்தம் மற்றும் ஆழ்வார்களின் தேனொழுகும் பாசுரங்களைக் கொண்டும் அறியலாம். அதனைப்போன்று பரமபதத்தில் ஆனந்தத்தைத் தவிர வேறொன்றும் கிடையாது. பரமபதம் எனும் திவ்யலோகத்தை அடைவதற்கு உபாயமாக உள்ளது பக்தியும் (பக்தியோகம்) ப்ரபத்தியும் (சரணாகதி). பக்தியோகம் செய்வதற்கு தற்போது இக்கலியில் உள்ளவர்கள் அஸக்தர்கள் . மேலும், பக்தியோகம் தைலதாரையாக இருத்தல் மிகவும் அத்யாவஸ்யமான ஒன்றாகும். தற்போதுள்ள கலியுகத்தில் பக்தியோகம் செய்பவர்கள் அரிதிலும் அரிது ; மிக மிக அரிதாக ஒரு சிலர் இருக்கலாம் ; அவர்களை நாம் காண்பது எளிதல்ல; மேலும், அவர்களும் பல ஜன்மங்களாக பக்தியோகத்தினைக் கடைப்பிடித்து வருபவர்களாக இருப்பர். ஆக, நமக்கு இருக்கும் ஒரே வழி, சரணாகதியே ஆகும். எவ்வாறு நான்கு மறைகளில் மறைப்பொருளாக உள்ள ஸ்ரீமந்நாராயணனை, அபிநவ தசாவதாரங்களாகவுள்ள ஆழ்வார்கள்

தங்களது தீந்தமிழ் பாசுரங்கள் மூலம் வெளிக் கொணர்ந்தனரோ, அவ்வாறு தொன்று தொட்டு உள்ள சரணாகதி தத்துவத்தினை மிக லகுவுடனும் அனைவரும் கடைப்பிடிக்கும் வண்ணமும் ஏற்படுத்தியவர் நம் இராமாநுசனே !! (உய்ய வழி உடையவர் திருவடி அல்லவா – அவரல்லவோ மத்யமணியாக விளங்குகிறார் – நாமனைவரும் அவரின் திருவடி ஸம்பந்தத்தினால் ஏற்றம் கண்டவர்கள்). அவரின் சரணாகதி கத்யமே, நமக்கெல்லாம் இதனை மிக மிகத் தெளிவாக தெரிவிக்கும். தாயாரும், பெருமாளும் அவருடனேயே உரையாடினர். அவரின் சரணாகதியையும், அங்கு அச்சமயத்தில் கூடியிருந்தவர்களுக்காகப் பரார்த்தித்துக்கொண்ட உடையவரின் மனம் உகக்க, அவர்களுக்கும் திவ்ய நித்ய பதமான பரமபதத்தினை திவ்யதம்பதிகள் அளித்தனர். உடையவர் புருஷகாரமாக உள்ள தாயாரை முன்னிட்டுக்கொண்டு சரணாகதி அனுஷ்டித்தார். அத்துணை ஏற்றமிகு பகவானின் திவ்யமஹிஷிகளைப் பற்றி இரத்தினச்சுருக்கமாக தற்போது காணலாம் ; ஏதேனும், குறை காணப்படில் அடியேனை க்ஷமிக்கப் ப்ரார்த்திக்கிறேன் .

**எம்பெருமானின் திவ்யமஹிஷிகள் :-**

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் திவ்யமஹிஷிகள் ஸ்ரீதேவி, பூதேவி மற்றும் நீளாதேவி ஆவர். பகவானின் வலப்புறத்தில் ஸ்ரீதேவி தாயாரும் இடப்புறத்தில் பூதேவி மற்றும் நீளாதேவிமாரும் உள்ளனர். இவர்கள் மூவரும் சேதனர்களுக்காக செய்யும் செயல் அலாதியானது. புருஷகாரம் அல்லது பகவானிடம் பரிந்து பேசுதல் என்பது இவர்கள் மூவரால் மட்டுமே முடியும். இதில் ஒரு அதிவிசேஷம் என்னவென்றால், பகவானுக்கு இருபுறமும் இருந்து கொண்டு தங்களது தலையாய கடமையான சேதனர்களை காப்பாற்றும் முயற்சியில் இறங்கி, பகவானை தங்கள் சொல்லுக்கு இரங்க வைக்கின்றனர். அதனை நாம் ஒரு சிறு தொகுப்பாக தனித்தனியே காணலாம்.

**1. ஸ்ரீதேவி தாயார் (பெரிய பிராட்டி) :-**

அகலகில்லேன் என்று எப்பொழுதும் அனைத்து தருணங்களிலும் ஸ்ரீமந்நாதனான பகவானை விட்டுப் பிரியாதவள். பகவானுக்கு மங்களத்தைக் கொடுப்பவள்; ப்ரளய கால கலகத்தில்

ப்ரதான இடம் வகிப்பவள்; மஹாலஷ்மி என்று அறியப்பெறுபவள்; பகவானுடன் கூடவே அவதாரங்களின் பொழுது தானும் இறங்கி வருபவள் ; பாற்கடலில் தோன்றியவள் ; அமிர்தத்துக்கெல்லாம் அமிர்தமாக இருப்பவள்; தயைக்கு இருப்பிடமானவள் ; சேதனனை ஆசார்ய ஸம்பந்தத்தின் மூலம் ப்ரபன்னனாக மாற்றுபவள்; கருணைக்கடலாக விளங்குபவள் ; தனக்கு அநீதி இழைத்தவரையும் மன்னித்து பகவத் சரணங்களில் சேர்ப்பவள்; திவ்ய கடாக்ஷத்தினை அருளுபவள் ; புருஷகார பூதையாக ப்ரதான இடம் வகிப்பவள் ; ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் ஒரு பாலமாக இருப்பவள்; எந்தவொரு ஆயுதத்தினையும் தனது திருக்கரங்களில் தரிக்காமல் தயையையே (கருணை, பரிவு) திவ்யாயுதமாகக் கொண்டு சேதனர்களை திருத்திப் பணி கொள்பவள் . நமது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் ஆணிவேராகக் கருதப்படும் முதலாழ்வார்கள் மூவரில் பேயாழ்வார் முதன்முதலில் கண்டது திருவினையே (திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் ...... மூன்றாம் திருவந்தாதி முதல் பாசுரம் ) மேலும், ஸ்ரீ ஆளவந்தாரின் சதுஸ்லோகி, ஸ்ரீ உடையவரின் சரணாகதி கத்யத்தில் ஸாதித்த ‘அஸ்மிந் மாதரம்‘, இதற்கு திருவாய் மலர்ந்தருளிய தாயார், கூரத்தாழ்வானின் ஸ்ரீஸ்தவம், மற்றும் ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீஸ்துதி, மேலும் பற்பல ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகள், ஸர்வலோக நாயகியாம் ஸ்ரீமஹாலக்ஷ்மியைப் பறை சாற்றுவது கண்கூடு.

இதற்கு மேலும் வலு சேர்க்கும் விஷயமாக உள்ளது ஸ்ரீவேங்கடாத்வரி, தாயாரின் விஷயமாக அருளிய ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம் (திருவேங்கடமுடையானிடம் அபசாரப்பட்டாலும் அந்த அபசாரம் நீங்க ப்ரார்த்தித்தது அகலகில்லேன் என்றிருக்கும் தாயாரிடமல்லவா) . மேலும், இவள் தன்னிடத்தே பற்பல திருக்கல்யாண குணங்களை வெகு இயல்பாகக் கொண்டவள். இவளிடம் மயங்காத ஆசார்யசீலர்களும் இலர். இதுவே நிதர்சனம் !! மேற்கூறியவை ஒரு சிறு அறிமுகமே ! வேதபாகமான ஸ்ரீஸூக்தம் இவளின் பெருமையை பரக்கப் பேசுகிறது.

**2. பூதேவி தாயார் ( பூமிப்பிராட்டி ):-**

பெரிய பிராட்டிக்கு அடுத்து வருபவள்; க்ஷமையின் இருப்பிடம் மற்றும் பிறப்பிடம் என்றே கூறலாம்; சேதனர்கள்பால் இருக்கும்

பொங்கும் பரிவு இவளுக்கு மிக மிக இயல்பு; பொறுமை இவளுக்கிருக்கும் இயல்பான குணம்; இந்த தாயாரின் திருக்கல்யாண குணமான பொறுமை உள்ளதால் தான், பொறுத்தார் பூமி ஆள்வார் என்ற பழமொழி வந்துள்ளதோ என அடியேனுக்கு ஏற்படுகிறது; ஸ்ரீவராஹ அவதாரத்தினை நினைவுபடுத்தும் திவ்யதேசங்களாக உள்ள ஸ்ரீமுஷ்ணம் மற்றும் திருவிடந்தையில் பெருமாளுக்கு இடப்பக்கத்தில் இருந்து கொண்டு தனது திருநேத்ரங்களினாலேயே பகவானுக்கு சேதனர்கள் பேரில் பரிவினைப் பொழியும்படி கேட்கிறாள் ; மேலும், கோதையின் திருவவதாரத்திற்கு வித்தாக அமைந்தது ஸ்ரீவராஹ அவதாரமே ; ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் மூன்று என்ற எண்ணிற்கு ஒரு தனித்தன்மையும் பொருளும் இருப்பதை அனைவரும் அறிவர்; அதனை ஆமோதிப்பது போன்று சரமச்லோகங்களும் மூன்று உள்ளது ;

அதில் முதல் முதலாக வருவது ஸ்ரீ வராஹ சரம ஸ்லோகமாகும்; காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்ற முதுமொழிக்கேற்ப ஒருவன் தனது இந்திரியங்கள் அனைத்தும் நல்ல நிலையில் உள்ள போது பகவானை வேண்டி சரணடைந்தால் பகவான் அவனின் அந்திம காலத்தில், அவனின் இந்திரியங்கள் யாவும் செயலிழந்த நிலையில் தான் அவனை நினைக்கிறேன்; அவனுக்கு பேருதவி செய்கிறேன் என்று பூமிப்பிராட்டிக்கு சத்திய ப்ரமாணம் செய்து கொடுத்துள்ளான்.

அதன் பிறகு வந்தது தான் கோதையின் திருவவதாரம்; நமக்கெல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக இருந்து செயல் படுத்திக் காட்டியவள் நம் ஆண்டாள்; ஸ்வாமி தேசிகன் பூமிதேவியின் விஷயமாக 33 ஸ்லோகங்களில் ஸ்ரீபூஸ்துதி அருளியுள்ளார். அர்ச்சையில் உள்ள அனைத்து எம்பெருமான்களும் ஸ்ரீதேவி பூதேவி சமேதராகத்தான் இருப்பர் (சக்கரவர்த்தி திருமகனான ஸ்ரீராமன் விதிவிலக்கு – அவன் ஏக பத்தினி விரதனன்றோ ! ஒரு வில், ஒரு சொல், ஒரு இல் – இதற்கு ஒரு உருவகம் தந்தால் அது ஸ்ரீராமனாக மட்டுமே இருக்க முடியும்) பெரிய பிராட்டியான ஸ்ரீதேவி தாயாருக்கு என்றும் துணை நின்று சேதனர்களை காப்பவள். வேதபாகமான பூஸூக்தம் இவளின் பெருமைதனை விரிவுடன் விவரிக்கிறது.

**நீளாதேவி தாயார் :-**

பகவானின் ப்ரியமஹிஷிகள் மூவரில் நிறைவாக வருபவள். ப்ரபன்னர்களின் குற்றங்களைக் கண்டு கொள்ளாமல் பகவானை செய்வதில் இவளுக்கு நிகர் இவளேயாகும் !! என்னவொரு தனித்துவம் !! தனக்கு முன் உள்ள ஸ்ரீதேவி மற்றும் பூதேவி தாயார்கள் பகவானை சேதனர்கள் பேரில் கருணை கொள்ளச் செய்வதில் பகவானுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, தண்டதரத்வனாய் இருக்கும் பகவானை தயா தரத்வனாய் மாற்றுவதில் பெரும் அங்கம் வகிப்பவர்கள், இல்லையா !! அதற்கு பிறகும் ஒரு சில சமயம் பகவான் சேதனர்களின் குற்றங்களைப் பார்க்கில், பகவானின் திருநேத்ரங்களை மறைத்து சேதனர்களின் பேரில் உள்ள குற்றங்களை மறக்கடிப்பவள் இவளேயாகும். பூரணமாகப்பார்க்கில் பகவானின் மூன்று திவ்யமஹிஷிகளும் தங்களது வாளப்யத்தினால் பகவானை தங்கள் வசப்படுத்தி சேதனர்களின் குற்றங்களை கண்டு கொள்ளாமல் செய்வதிலும், மேலும் ப்ரபன்னர்கள் விஷயத்தில் லகு சிக்ஷை அளிக்கச்செய்தும் சேதனர்கள்பால் உள்ள தங்களது வாத்சல்யத்தை வெளிப்படுத்துகின்றனர். கர்மத்தில் உழலும் நம் போன்றவர்களுடைய உயிரியல் தாய்மார்களே தத்தம் குழந்தைகளிடம் பரிவினை காட்டுகின்றனர், அவ்வாறிருக்கும் பொழுது ஜகத்துக்கே தாயாராக இருப்பவள் நம்மேல் வாத்சல்யத்தை கண்டிப்பாக காட்டுவாளன்றோ !! மேலும், வேத பாகமான நீளா ஸூக்தம் இவளின் பெருமையை நன்கு விளக்கும்.

ஸ்ரீராமாவதாரம் மற்றும் ஸ்ரீகிருஷ்ணாவதாரங்கள் பகவானின் பூர்ணாவதாரங்கள் ஆகும். ஸ்ரீராமாவதாரமோ, ' ஒருவனுக்கு உலகில் ஒரு தாரம் ' எனும் உயர்வினைக் காட்டிய ஒரு அவதாரமான படியால், சீதாப்பிராட்டியிடம் ஸ்ரீ, பூ மற்றும் நீளை மூவரும் ஒன்றி இருந்தனர். இதற்கு மாறாக ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்திலோ, பகவானான கண்ணனுக்கு பல பத்தினிமார்கள் (கோபியர்கள் கொஞ்சும் ரமணன்றோ அவன்). இதற்கு காரணம் என்னவாக இருக்கும் ? அடியேனின் மனதினில் தோன்றியதை ஸேவா வாசகர்களாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். ஸ்ரீகிருஷ்ணாவதாரத்திற்கு முற்பட்டது ஸ்ரீராமாவதாரம்; ஸ்ரீராமன் வனவாசத்தின் பொழுது தண்டகாரண்யம் சென்றான், இதை அனைவரும் அறிவர்;

அச்சமயத்தில், அங்குள்ள ரிஷிகள் எல்லோரும் ஸ்ரீராமனின் அழகினில் வெகுவாக ஈடுபட்டு, தங்களது நிலையையும் மறந்தனர். ஸ்ரீராமனோ ஏக பத்னி விரதனன்றோ. மேலும் பக்த பராதீனன் அல்லவா ; அவர்களின் அபிலாஷைகளை அடுத்து வரவிருக்கும் அவதாரமான ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் நிறைவேற்றுவதாக உறுதியளித்தான். ஆக, கோபிமார்கள் அனைவரும் முற்பிறவியில் ரிஷிகளாக உள்ளவர்களே ஆகும் .

மேலும், இதில் விசேஷமாக கவனிக்கத்தக்கது என்னவெனில், ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தின் பொழுது பகவானின் ப்ரியமஹிஷிகளான மூவரும் ( ஸ்ரீதேவி, பூதேவி மற்றும் நீளா தேவிகள் முறையே ருக்மணி பிராட்டி, ஸத்யபாமை மற்றும் நப்பின்னையாக அவதாரம் புரிந்து ) கண்ணனின் திருக்கரம் பற்றினர். இந்த நிகழ்வானது வேறு எந்தவொரு அவதாரத்திலும் இல்லாத அதிவிசேஷ ஆச்சர்யம் மிகுந்தது என்பதைக் கூறவும் வேண்டுமா !! கலியினில் அவதரித்த கோதையும் நப்பின்னைக்காக திருப்பாவையில் மூன்று பாசுரங்கள் இயற்றினாள் ( 18, 19 மற்றும் 20 வது பாசுரங்களான உந்து, குத்து மற்றும் முப்பத்து...) ஆண்டாளுக்கு பின் அவதரித்த ஸ்ரீ உடையவரும் தனது ஆசார்யரான பெரிய நம்பிகளின் திருக்குமாரத்தி அத்துழாயை நப்பின்னையாகவே கண்டு மயங்கினார் என்பதை யாவரும் அறிவர். ஸ்ரீ உடையவர் அவ்வாறு திருப்பாவையில் மயங்கிய பாசுரம் உந்து மதகளிற்றன் என்று துவங்கும் 18 வது பாசுரம்; அதை உடையவர் பாசுரம் என்றே கூறுவர் .

ஆக, இச்சிறு வ்யாஸத்தில் பகவானின் திவ்ய மஹிஷிகளாக இருக்கும் பெரிய பிராட்டியார், பூமிப்பிராட்டியார் மற்றும் நீளா பிராட்டிமார்களைப் பற்றி வெகு சுருக்கமாகக் கண்டோம். நமது ஸம்ப்ரதாயத்தில் தாயார்களுடன் உடைய பெருமாளும், பெருமாளுடன் கூடின தாயார்களுமே ஏக லக்ஷ்யம். தாயார்கள் மூவருக்கும் காருண்யமே ப்ரதானம் ; தயையே அவர்களின் அற்புத ஆயுதம்; சேதனர்களைத் திருத்திப் பணி கொள்வதிலேயே ஆனந்தம்; உபாயம் மற்றும் உபேயத்துடன் புருஷகாரமாக இருப்பதே அவர்களின் தனித்துவம். இத்தகைய ஏற்றம் உடைய தாயார்களை நாம் பெற்றதில் நாமல்லவோ மிகுந்த பாக்யசாலிகள் !!

ஆழ்வார், எம்பெருமானார், ஸ்வாமி தேசிகன் மற்றும் ஆசார்யன் திருவடிகளே சரணம் !!

# ஸ்ரீ யாதவாப்யுதயம்

## (இரண்டாம் பதிப்பு)

ஸ்ரீ யாதவாப்யுதயம் என்பது ஸ்ரீக்ருஷ்ணன் பெருமைகளை எடுத்துரைக்கும் மஹாகாவ்யம். ஸ்ரீசுகரும் அனுபவித்துள்ளார். ஸ்ரீபாகவதம் தசமஸ்கந்தம் பூர்ணமாக க்ருஷ்ண சரித்திரத்தை அனுபவிக்கத் தோன்றியது. புராண ரத்னமான ஸ்ரீவிஷ்ணுபுராணமும் பரம ப்ராமாணிக க்ரந்தமாகும். ஸ்வாமி தேசிகன் கவிதார்க்கிக கேஸரியாக எழுந்தருளியிருந்தார்.

பல தேசத்தைச் சேர்ந்த பல கவீச்வரர்கள் எழுதியிருந்த காவ்யங்களைக் கடாக்ஷிக்கும் பாக்யம் ஸ்வாமிக்கு ஏற்பட்டது. விலக்ஷண மேதாவிலாசத்தினால் ஆங்காங்கு அவரது ஸ்ரீஸூக்திகளில் காணும் குறைபாடுகளைக் களைந்து கவிதாமார்க்கத்தை சோபந மார்க்கமாய் செய்யத் திருவுள்ளம் கொண்டு ஸ்வாமி காவ்யங்களை அருளிச்செய்தது தென்னாட்டின் தனித்திலகமாய் மஹாகாவ்யமாயும் , ஸந்தேச காவ்யமாயும், நாடகமாயும் ஸ்வாமியின் ஸ்ருஷ்டிகள் இடம் பெற்றன.

உலகில் உள்ள பல கவிகளும் சிரஸ்தானம் பண்ணும்படி உத்தமோத்தம படைப்புக்கள் தோன்றின. பத, பாத, அக்ஷரங்களில் காணும் அழகை என்னவென்று சொல்வது. பரோ ஹயமுக: தத்ராம்ப கோ விஸ்மய: என்று ஆத்ரேய அரசாணிபாலையில் தோன்றிய வேங்கடாத்வரி ஸ்வாமி போன்ற ச்லேஷயமக சக்ரவர்த்தி ஸ்வாமி போன்றவர்கள் கொண்டாடும் வீறு ஸ்வாமியினுடையது எனில் நாம் என்ன சொல்ல முடியும்.

வ்யாக்யானம் பண்ணைப்புகுந்த ஸ்ரீ அப்பய்ய தீக்ஷதர் போன்ற மஹநீயர்கள் கூறும் அழகைப் பார்த்தால் நாம் வாய்புதைத்துத்தான் நிற்க வேண்டும். ஸ்வாமியே க்ஷேமதம் காவ்யரத்னம் என்று ஸாதித்தருளுகிறார். ஸுகம்பீரமான தேசிக காவ்யங்களின் ஏற்றத்தை நாம் அறிய வேண்டும். ஸுபாஷித நீவி என்கிற ப்ரபந்தத்தின் பெருமை நம் சொல்லுக்கு அப்பாற்பட்டது. ஒரு ச்லோகத்திற்கு 24 விதமான நிர்வாகம் பண்ணுவது என்கிற நிலை ஸாரஸ்வத ப்ரபஞ்சத்தில் எங்கும் காணக்கிடைக்காதது. இது கவிலோகத்தில் வியப்பைத் தரக்கூடியது. அகில உலகத்திலும் என்றால் மிகை

**இல்லை. வடக்கே தோன்றிய மஹா காவ்யங்களுக்கு எந்த விதத்திலும் ஸ்வாமி காவ்யம் தாழ்ந்ததில்லை என்பதோடன்றி இதற்கு ஸமமாக அங்கு ஏதாகிலும் காவ்யம் இருக்குமா என்றே கேட்கத் தோன்றுகிறது.**

**நிற்க. ஸ்ரீ விசிஷ்டாத்வைத மதப்ரசாரத்துக்கு ஸ்வாமியின் திவ்ய காவிய நாடகங்களே போதுமானது. ஒன்று கூற விரும்புகின்றேன். ஒரு யாமநீயாமத்தில் பாதுகா ஸஹஸ்ரம் என்பதொரு விசித்ரமான காவ்யம் அவதரித்ததே. அதே போல் வரஸித்த காவ்யம் எங்காவது உளதா என்று கேட்பதைத் தவிர வேறு வழியில்லை. இத்தகைய திவ்ய காவியத்தை (யாதவாப்யுதயத்தை) 'பாட்யே கேயே ச மதுரம்' என்னும்படி பாடி அனுபவிக்க வேண்டுமென்று சரண்ய தம்பதிகள் ஸங்கல்பித்தனர். ஒவ்வொரு ஸர்கத்தின் ஆரம்பத்திலும் சுருக்கமான ஸாரம் வரைந்துள்ளேன்.**

*(யாதவாப்யுதய மஹாகாவ்யத்திற்கு ஸேவா ஸ்வாமி அருளிய முன்னுரையிலிருந்து...)*

இப்படி பல பெருமைகள் வாய்ந்த இக்காவ்யத்தை எல்லோரும் பாராயணம் பண்ணும்படியாக, ஸ்வாமி தேசிகனின் அனுக்ரஹ விசேஷத்தாலும், ஸேவா ஸ்வாமியின் ஆசியினாலும், அனைத்து ச்லோகங்களும் தமிழில் ஒரே நூலாக, இக்காவ்யத்தின் முதல் பதிப்பு ஸேவா ஸ்வாமியின் 96வது திருநக்ஷத்ரத்தன்று (1.4.2018) மணிமண்டபத்தில் வீற்றிருக்கும் பரிமுகனின் திருவடிவாரத்தில் வெளியிடப்பட்டது.

முதல் பதிப்பின் ப்ரதிகள் தீர்ந்துவிட்ட நிலையில், ஆஸ்திகர்களின் வேண்டுகோளுக்கிணங்க தற்பொழுது **இரண்டாம் பதிப்பு** வெளியாகிறது. **ஸேவா ஸ்வாமியின் ஶதமான உத்ஸவம்** (2022-23) நடைபெறும் இந்த ஆண்டில், சித்திரை மாதத்தில் சித்திரை நக்ஷத்தன்று (14-05-2022) இக்காவியம் வெளியிடப்பட்டது கூடுதல் சிறப்பு. அச்சு விலை வெகுவாக உயர்ந்திருப்பதால், சுமார் 700 பக்கம் கொண்ட இந்நூலின் இரண்டாம் பதிப்பின் விலை ரூ. 450.00 என்று திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. தேஶிக பக்தர்கள் விலை உயர்வை பொறுத்துக் கொண்டு ஆதரவளிக்குமாறு வேண்டுகிறோம். விவரங்களுக்க 044-26180481 (அ) 9841046264 என்ற எண்ணிலோ தொடர்பு கொள்ளவும்.

# கேள்வி - பதில்

**கேள்வி: பக்தர்களுக்கு ஆசாரம் தேவை தானா ?**

**பதில்: உயர்ந்த பக்தி இருப்பவர்களுக்கு ஆசாரமும் இருந்தே தீரும்.**

**கேள்வி: பெருமாளை தர்சனம் பண்ணினேன் (பார்த்தேன்) என்று சொல்வது சரியா ?**

**பதில்: பெருமாளை ஸேவித்தேன் என்று சொல்வது தான் நம் முன்னோர் காட்டிய வழி.**

**கேள்வி: எத்தனை முறை ஸேவிக்க வேண்டும் ?**

**பதில்: 2க்குமேல் இரட்டையாக ஸேவிக்க வேண்டும்.**

**கேள்வி: பெண்களுக்கு ஸேவிப்பதில் விசேஷம் உண்டா ?**

**பதில்: உண்டு அவர்கள் ஸாஷ்டாங்கப்ரணாமம் செய்யக் கூடாது.**

**கேள்வி: பெரியவர்கள் சிறயவர்களை ஸேவிக்கலாமா ?**

**பதில்: கூடாது. அப்படி பெரியவர்கள் ஸேவித்தால் சிறியவர்களுக்கு ஆயுட்குறைவு ஏற்படும் என்பர்.**

**கேள்வி: வைஷ்ணவன் வைஷ்ணவனைப் பார்த்த உடன் ஸேவிக்க வேண்டும் என்கிறார்களே. இது சரியா ?**

**பதில்: முற்றிலும் சரி, ஆனால் தகப்பனார் பிள்ளையையும், குரு சீடனையும், கணவன் மனைவியையும் ஸேவிப்பது என்று ஏற்பட்டு விட்டால் சாஸ்த்ரம் அழிந்துவிடும்.**

**கேள்வி: எல்லா தேவர்களும் பெருமாளை ஸேவிப்பர் என்கிறார்களே பெருமாள் யாரையாவது ஸேவித்தது உண்டா ?**

**பதில்: ஸேவிப்பதில்லை. பெருமாளை எதுவும் கட்டுப்படுத்தாது. ஆனால் பெருமாள் தான் ஸேவிப்பதாகச் சொல்கிறார்.**

**கேள்வி: அதெப்படி ?**

**பதில்: பெருமாள் கூறுகிறார்:- விப்ராந் ஸ்வலாப ஸந்துஷ்டாந் ஸாதூந், பூதஸுஹ்ருத்தமான், நிரஹங்காரிண: சாந்தாந் நமஸ்யே ஶிரஸா அஸக்ருத் . இது ஸ்ரீபாகவதத்தில் உள்ளது. இதன் பொருள். கிடைத்ததைக் கொண்டு ஸந்தோஷ மடைபவனும் ஸாதுவும், ப்ராணிகளிடம் நட்பு கொள்பவனும், அணு வத்தனை**

அஹங்காரமும் இல்லாதவனும், சாந்தனுமான அந்தணர்களை (அடிக்கடி) பன்முறை வணங்குவேன்'' என்கிறார். ஆனால் வணங்கினார் என்று ஆதாரமாகக் கொள்வதில்லை. தலை வணங்கி கௌரவிக்கிறார் என்று கருத்து.

கேள்வி: வயதால் குறைந்த ஆசார்யர்களை - யதிகளை வயதானவர்கள் ஸேவிக்கலாமா ?

பதில்: ஆசார்யன் என்ற தன்மையிருப்பதாலும், யதிகள் என்ற நிலையாலும் வயது பார்ப்பது கூடாது.

கேள்வி: யார் யாரை ஸேவிக்கக்கூடாது ?

பதில்: பிக்ஷைக்கு எழுந்தருளும்போது யதிகளை ஸேவிக்கக் கூடாது. ஜபம் ஹோமம் செய்து கொண்டிருப்பவர்களை, நோய் வாய் பட்டிருப்பவர்களை, படுத்துக் கொண்டிருப்பவர்களை ஸேவிக்கலாகாது.

கேள்வி: சில தெய்வங்களை ஸேவிக்கலாகாது என்று கூறுகிறார்களே ! ஏன் ?

பதில்: தெரிந்தவர்கள் சொல்கிறார்கள் - தெரிந்துச் சொல்கிறார்கள் திருந்தச் சொல்கிறார்கள். தேவையில்லை என்பதால் சொல்கிறார்கள். ஏற்பதில் குறையில்லை.

கேள்வி: ஸேவைகள் எத்தனை வகையாயிருக்கும் ?

பதில்: பொதுவாக மூன்று. உள்ளத்தால் ஸேவிப்பது- கௌரவித்தல்; உரையால் ஸேவிப்பது. புகழ்தல்; உடலால் ஸேவிப்பது வணங்குவது அஞ்சலிசெய்வது போன்றவை.

கேள்வி: கணவனை மனைவி ஸேவிப்பதில்லையே ஏன் ?

பதில்: சிலர் ஸேவிப்பது உண்டு. சிலர் ஸேவிக்காதது அதிபரிசயத்தால் இருக்கலாம்.

கேள்வி: முன்காலத்தில் பெரியவாள் ஒருத்தரைக் கண்டால் உடனே தெண்டனிடுவார்களே இக்காலத்தில் அது இல்லையே ஏன் ?

பதில்: சிலர் செய்வது உண்டு. சிலர் தம்மையே பெரியவன் என்று நினைத்துக் கொண்டு விடுவதாலும், ஸேவித்தால் தனக்கு குறைவு ஏற்பட்டு விடுமோ என்று அநாவச்யமாக தானே நினைத்துக் கொண்டு விடுவதாலும், அபிஜநவித்யா

**வித்தமதத்தாலும் ஸேவிக்காமல் இருந்து விடலாம். அது ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணத்துக்கு கறும்புள்ளி வைத்ததாகும்.**

**கேள்வி: எங்கள் ஆசார்யனைத் தவிர மற்றவரை ஸேவிப்பதில்லை என்கிறார்களே ! இது சரியா ?**

**பதில்: இப்படிப்பட்ட சிஷ்யர்களைப் பெற்றிருப்பது ஆசார்யனுக்கே அவத்யம். இது பக்தியாகாது. மறு முனையில் பார்த்தால் வெறி என்பதற்கு ஒப்பாகும்.**

**கேள்வி: நமது பகைவர்களை நாம் வணங்கலாமா ?**

**பதில்: ஒருக்கால் வணங்கலாம். நம் ஆசார்யனை த்வேஷிப்பவர்களை ஒருக்காலும் வணங்கலாகாது.**

**கேள்வி: ஸேவாகாலம் என்று எதற்குப்பெயர் ?**

**பதில்: திவ்யப்ரபந்தம் ஸேவிப்பதை ஸேவாகாலம் என்பர்.**

**கேள்வி: ஒரு பாட்டுப்பாடி ஒரு நூலை இயற்றியவர் யார் ? அந்தநூலின் பெயர் என்ன ?**

**பதில்: திருமங்கையாழ்வார், ப்ரபந்தம் திரு எழு கூற்றிருக்கை. ஸம்பிரதாயத்துக்கு, கவியுலகுக்கு, அறிவின் ஒளிக்கு ஓர் உரைகல் இந்தநூல்.**

**கேள்வி: பழ மறையின் பொருளை எந்த நூலில் காணலாம் ?**

**பதில்: அமலனாதிபிரானில் என்கிறார் ஸ்வாமிதேசிகன்.**

**கேள்வி: பல்லாயிரம் பாடியும் ஆழ்வார்பதம் பெறவில்லை ஒருவர். பத்துப்பாடியே ஆழ்வார்பதம் பெற்றுவிட்டார் ஒருவர். இதற்கு காரணம் என்ன ?**

**பதில்: பகவத்கடாக்ஷ விசேஷம் தான் காரணம் என்பர் ஸ்வாமி தேசிகன்.**

**கேள்வி: ப்ரம்ஹமஸூத்ரத்துக்கு தீபம் ஸாரம் பாஷ்யம் என்று மூன்று உரை எழுதினார் நம்மிரா மாநுசன். ஒன்றே அதிலும் பெரிதே போதாதோ ?**

**பதில்: பலபடிகளில் சொல்வது நல்லது தானே .**

**கேள்வி: இதற்கு முன் உதாரணம் உண்டா ?**

**பதில்: ஏன் இல்லை ! திருமங்கையாழ்வார் முதலில் சிறிய திருமடலை அனுஸந்தானம் பண்ணினார் ஆனால் அத்துறை**

அவரை ஈர்த்தது. பெரிய திருமடலும் அவதரித்தது.

கேள்வி: நிறைய படிப்பது தேவை தானு ?

பதில்: நேர்மையான அறிவை பாதிக்காமல் இருந்தால் இருந்து போகட்டுமே.

கேள்வி: குற்றவாளிகள் என்று பிறரை ஒதுக்கலாமா ?

பதில்: குன்றனைய குற்றம் இருப்பினும் குணத்தை மட்டும் கொள்வது நல்லது. ஒதுக்கலாகாது.

கேள்வி: பதிதன் என்று யாரைச் சொல்வது ?

பதில்: தனது வழியிலிருந்து விழுந்தவனே.

கேள்வி: மேலே இருப்பவன் தானே விழமுடியும் ?

பதில்: ஆம், தான் மேலே இருப்பது நல்லது என்ற எண்ணம் இதனுலேயே ஏற்படுமே. கவனக்குறைவால் தரையில் இருப்பவனும் விழலாம்.

கேள்வி: பணத்திலேயே நோக்கு இருப்பவனுக்கு எது தெரியாது?

பதில்: பண்பு என்னலாம். அல்லது எதுவுமே தெரியாது எனலாம்.

கேள்வி: எத்தகைய கோயில் சிறந்தது இக்காலத்தில் ?

பதில்: சண்டைகள் நிறைந்த கோயிலைவிட, சந்தைக்கடை கோயிலை விட சாந்தியை தரும் கோயிலே சிறந்தது என்று கூறலாம்.

கேள்வி: விளக்குகளுக்கு அப்பெயர் வரக்காரணம் என்ன ?

பதில்: இருளை அகற்றி பொருட்களை விளக்கிக் காட்டுவதால் அப்பெயர்.

கேள்வி: உய்வதற்கு வழி என்ன ?

பதில்: கடந்த நாட்கள் பழுதாய் விட்டன என்ற உணர்வு ஏற்பட்டு விட்டால் வழி தானே தெரிய ஆரம்பிக்கும்.

கேள்வி: நலம் தரும் சொல் எது ?

பதில்: நாராயணு என்னும் நாமம்.

கேள்வி: ஒன்றை அறிந்து விட்டால் எல்லாம் அறிந்ததாகி விடும் என்று வேதாத்திகள் சொல்கிருர்களே இதை விளக்க முடியுமா?

**பதில்: வேதாந்த தேசிகனை அறிந்து கொண்டுவிட்டால் எதையுமே அறிந்த தாகிவிடும்.**

**கேள்வி: நீர் பாஷ்யம் போன்றவற்றை ஏன் பத்ரிகையில் ப்ரசுரிப்பதில்லை ?**

**பதில்: காலக்ஷேபத்துக்கு என்று ஒருசில க்ரந்தங்களாவது இருக்கட்டுமே என்று நினைக்கிறேன். அவை அம்பலத்தில் வர வேண்டாமே.**

**கேள்வி: மரம் எப்பொது அழிகிறது ?**

**பதில்: வேரில் நோய் ஏற்பட்டால் அல்லது வேர் கெட்டுவிட்டால்.**

**கேள்வி: உலகம் கெட்டுவிட்டது என்று பலர் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே ! இது சரியா ?**

**பதில்: தங்கள் பங்கு இதில் எவ்வளவு என்பதை உணர்ந்து விட்டால் சொல்ல மாட்டார்கள் என்று எண்ணுகிறேன்.**

**கேள்வி: எதுவும் ஏற்கப்படும் என்கிறார்களே அவர்களைப் பற்றி?**

**பதில்: நாம் ஏற்கவேண்டும் என்ற நிர்பந்தம் இல்லையே.**

**கேள்வி: அறிவின் வளர்ச்சியின்மைக்கு அடையாளம் உண்டா?**

**பதில்: கண்டவர் சொல்வதெல்லாம் உண்மை என்று ஏற்றுக் கொள்கிறார்களே.**

**கேள்வி: எந்த நிலை ஆபத்தானது ?**

**பதில்: தான்தோன்றித்தனம்.**

**கேள்வி: தன்னை உண்மையில் எதிலிருந்து காத்துக் கொள்ள வேண்டும். ?**

**பதில்: ஆடம்பரங்களிலிருந்து.**

**கேள்வி: உலகில் உண்மையான மதிப்பு யாருக்கு ?**

**பதில்: ஆஸ்திகனுக்கு**

**கேள்வி: பெரியவர்களிடம் சில குறைகளைப் பார்ப்பது குற்றமா ?**

**பதில்: அவர்களுக்கு ஏதும் ஆகப்போவதில்லை. சந்திரனை யாரும் புறக்கணிப்பதில்லையே ! காண்பவன் தான் குறைவு-உடையவன்.**

**கேள்வி: தேவர்கள் ஸஹஸ்ரநாமம் சொல்லி வழிபடுவதுண்டா?**

**பதில்: உண்டு, ‘‘ இமையோர்கள் பேர்களாயிரம் பரவி நின்றடி தொழுவர் என்பர் கலியன்.**

**கேள்வி: நான் எந்தபாவமும் செய்ததில்லை. என்னைப் பாபி என்று சொல்லிக் கொள்ள என் மனம் இடங்கொடுக்க வில்லையே ?**

**பதில்: நீர் அப்பாவி என்று புரிகிறது. நமக்குத் தெரியாத பாவங்கள் நம்மிடம் எவ்வளவோ இருக்கின்றன. ‘‘நானே நானாவித நரதம் புகும் பாவம் செய்தேன்’’ இது கலியன் கூறுவது. புரிந்து கொள்ளலாமே.**

**கேள்வி: கார்த்திகையில் விளக்கேற்றுவதின் தனித்தன்மை என்ன ?**

**பதில்: உலகம் நன்ருக இருக்கவேண்டும், ஆள்பவர்கள் அல்லலுக்கு ஆளாகக் கூடாது. சுபிக்ஷம் எங்கும் ஏற்பட வேண்டும் என்பதற்காகவே. கார்த்திகையில் க்ருத்திகையில் பௌர்ணமியில் விளக்கு ஏற்றுவது.**

**கேள்வி: ஸ்வாமி தேசிகனுக்கு பாணாழ்வாரிடம் ஈடுபாடு எத்தகையது ?**

**பதில்: பாண்பெருமாள் என்றும், நம்பாணநாதன் என்று சொல்வதனாலேயே புரிந்துகொள்ளலாமே ! பதினாயிரம் பாடினவர்க்கும் கிடைக்காத பெருமை பத்துப் பாடினவர்க்கே ஏற்பட்டுவிட்டது என்ருல் இதனிலும் வேறு என்ன வேண்டும்.**

**கேள்வி: கார்த்திகையில் மேலும் ஏதாவது பெருமையுண்டா ?**

**பதில்: நிச்சயமாக உண்டு. நம்பாடுவான் என்பவரின் பெருமை கூறும் மாதமாயிற்றே !**

**கேள்வி: பெரிய ஏகாதசி, பெரியத்வாதசி என்று சொல்கிருர்களே! எப்படி ?**

**பதில்: வைகுண்ட ஏகாதசியை பெரிய ஏகாதசி என்பர். இது மார்கழி மாத சுக்லபக்ஷ ஏகாதசி. பெரியத்வாதசி கார்த்திகை சுக்லபக்ஷ த்வாதசி. இதை கைசிகத்வாதசி என்பர்.**

(ஸேவா ஸ்வாமியின் அமுத மொழிகளிலிருந்து...)

# ஸ்ரீ தேசிக திவ்ய ஸஹஸ்ரநாமம்

ஆர்.கண்ணன். பெங்களூரு

சத தூஷணியை ஒட்டிய திருநாமங்கள் தொடர்கின்றன.

**131 . சாஸ்த்ராத்யக்ஷவிரோதக்ந:**

வேதத்துக்கும் ப்ரத்யக்ஷத்துக்கும் விரோதத்தை ஒழித்தவர் ஸ்வாமி.

அத்வைத மதம் , ப்ரத்யக்ஷத்துக்கும் சாஸ்திரத்துக்கும் விரோதம் வரும்போது சாஸ்த்ரமே பரபலம் என்கிறது. ஆனால் ஸ்வாமி தேசிகன் ப்ரத்யக்ஷ ப்ரமாணத்துக்கு விரோதம் வராமல் சாஸ்திரத்துக்கு பொருள் கூறவேண்டும் என்று அருளிச்செய்தார்.

**132. அந்ருதாஸாத்ய- ருதார்த்தவித்**

பொய்யான வஸ்துவிலிருந்து உண்மையான வஸ்து உண்டாகாது என்று காட்டியவர் ஸ்வாமி.

அத்வைதிகள் ப்ரஹ்மம் தவிர சாஸ்த்ரங்கள்கூட பொய்யானவை என்று கூறி ஆனால் வேதத்திலிருந்து ஸத்யமான ப்ரஹ்மத்தை அறிகிறோம் என்கிறார்கள்.

ஸ்வாமி, ஸத்யத்திலிருந்தே ஸத்யம் வரும் என்று நிரூபத்தார்.(வேதமும் ஸத்யம், ப்ரஹ்மம் ஸத்யம் என்றபடி)

**133. ஜீவந்முக்தத்வஹா**

ஜீவன் முக்தி என்ற கருத்தை தப்பு என்று கண்டித்து ஒழித்தவர் ஸ்வாமி.

'தத் த்வமஸி ' முதலிய சில வேத வாக்யங்களை அறிந்தவர்களுக்கு ஜீவன்முக்தி என்னும் நிலை வருகிறது என்கிறார்கள் அத்வைதிகள். அதாவது உலகில் ஜீவித்துக்கொண்டே மோக்ஷத்தைப் பெற்றவர்கள் என்றபடி.

ஸ்வாமி ஜீவன் முக்தி கிடையாது; ஜீவனத்தின் முடிவில் அதற்கான பக்தி அல்லது பரபத்தி என்கிற உபாயம் ஸித்தித்த பன்பே மோக்ஷம் வரும் என்று நிரூபத்தார்.

**134. பாத ஸாமாநாதிகரண்யஹா**

பாதிக்கும் (இல்லை என்று நிஷேதம் செய்யும்) பொருளில் ஸாமாநாதிகரண்யம் வருவதில்லை என்று மறுத்தவர் ஸ்வாமி. இரண்டு வஸ்துக்களைக் கூறி இரண்டும் ஒன்று என்று கூறுவது ஸாமாநாதி - கரண்யம். இருட்டில் தூரத்திலுள்ள தூணைப்பார்த்து திருடன் என்று ஒருவன் கூறுகிறான். பக்கத்திலிருப்பவன் திருடன் தூண்தான் என்கிறான்- அதாவது நீ நினைப்பவன் திருடனில்லை என்கிறான்.

திருடனும் தூணும் ஒன்றாக மாட்டார்கள்..ஆகவே தூண் என்ற பதத்திற்கு திருடன் இல்லை என்றே பொருள்.அதுபோல உலகம் அவனே என்றால் உலகமாக நீ நினைப்பது உண்மையில் உலகமில்லை என்கிறார்கள் அத்வைதிகள். ஸ்வாமி, திருடன் தூண்தான் என்கிறவிடத்தில் தூண் இல்லை என்ற அர்த்தமில்லை, திருடனாக நீ நினைப்பது தூணே என்று பொருள் கூறினார். வாஸ்த்வத்தில் அங்கு தூண் உண்டு அது இருந்ததால்தான் திருடன் என்ற பரமம் உண்டாயிற்று என்று கூறி, ''எல்லாம் ப்ரஹ்மமே'' என்றால் ப்ரஹ்மம் உண்டு என்று விளக்கினார்.

**135 . ஸம்விதத்வைதஹா**

ஸம்வித் (ஜ்ஞானம் ) மட்டுமே உள்ளது; ( ஜ்ஞாதா முதலியன இல்லை) என்ற கருத்தை ஒழித்தவர்.

அத்வைதிகள் - ஜ்ஞானம்(அறிவு) மட்டுமே ஸத்யம்; அதுவே அறிபவன், அறியப்படுபவன் என்பதாகத் தோற்றுகிறது. விஷயங்களின் பிரிவுகளை முன்னிட்டு வெவ்வேறாகத் தோன்றுகிறது என்கிறார்கள்.

ஸ்வாமி, அறிபவன், அறியப்படும் பொருள் இவைகளைவிட்டு அறிவு என்று தனியாக ஒன்று கிடையாது என்றார். ''நான் இதை அறிகிறேன்'' என்னுமிடத்தில் நான் என்னும் அறிபவனை விட்டு, இதை என்ற அறியப்படும் விஷயத்தையும் விட்டு, அறிவு என்பது மட்டும் அனுபவம் ஒருவருக்கும் ஏற்படுவதில்லை.

**136 . மாய்யுபதேசாநுபபத்திவித்**

மாயி என்னும் அத்வைதிகளுக்கு உபதேசம் என்னும் செயல் பொருந்தாது என்று நன்கறிந்தவர் ஸ்வாமி.

ஆசார்யர் உபதேசம் செய்ய சிஷ்யன் கேட்பது உலக வழக்கம். அத்வைத மதத்தில் ஆத்மா ஒன்றே ; இரண்டாவது இல்லை(பொய்) என்ற கொள்கை உள்ளது. சிஷ்யன் பொய்யானால் யாருக்கு உபதேசம் செய்வது ? ஆகவே அத்வைத மதத்திற்கு உபதேசம் பொருந்தாது.

**137. நிர்விசேஷ திரோதாநஹந்தா**

விசேஷமற்ற ப்ரஹ்மத்தை அவித்யை மறைத்துவிடும் என்ற கருத்தை அழித்தவர் ஸ்வாமி.

ப்ரஹ்மத்திற்கு விசேஷங்கள் எதுவுமில்லை. அந்த ப்ரஹ்மத்தை அவித்யை மறைக்கிறது என்பது அத்வைதக் கொள்கை. அப்படியானால் அவித்யை நீங்கினால் ப்ரஹ்மத்தைப் பார்க்கமுடியும் என்றாகிறது. ஆனால் வேதமோ ப்ரஹ்மத்தை இந்திரியங்களால் பார்க்கமுடியாது என்றல்லவோ கூறுகிறது. அத்வைதிகளும் அப்படியே கூறுகிறார்கள். ஆகவே ப்ரஹ்மத்தை அவித்யை மறைக்கிறது என்பது கூடாது.

**138. ஆத்மாத்வைத பஞ்சஜக:**

ஆத்மா ஒன்றே ; பல ஜீவாத்மாக்கள் இல்லை என்ற கொள்கையை முறியடித்தனர் ஸ்வாமி.

ஆத்மா ஒன்றே . ஒரே சந்திரன் ஒரு தடாகத்தில்(குளத்தில்) பல அலைகளில் பல சந்திரன்கள் போல் பிரதிபலித்துத் தோன்றுகிறது. அதுபோல ஒரே ஆத்மா பல சரீரங்களில் பல ஆத்மாக்கள் போல் காணப்படுகிறது என்பது அத்வைதம்.

ஆத்மாக்கள் பல; ஒருவருடைய ஸுகதுக்கங்களை வேறொருவர் அநுபவிப்பதில்லை. ஆத்மா ஒன்றானால் ஒருவனுக்கு கஷ்டம் வந்தால் மற்றவனும் அதை உணரவேண்டும். அப்படி உலகில் நாம் காண்பதில்லை. ஆகவே இரு ஆத்மாக்களும் வேறு வேறு என்று ஆகிறது. ஆகவே அத்வைதத்தின் ஒரே ஒரு ஆத்மா என்பது ஏற்கக்கூடியதில்லை.

**139 . ஜீவ-ஈச்வர ஐக்ய வாதக்ந:**

ஜீவனும் ஈச்வரனும் ஒன்றே என்னும் ஐக்யம் கூறும் வாதங்களை வென்றவர் ஸ்வாமி.

அத்வைதிகள் 'ப்ரஹ்மத்தை அறிபவன் ப்ரஹ்மமாகவே ஆகிறான்' என்று ச்ருதி சொல்வதானால் மோக்ஷத்தில் ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்றே என்று ஐக்யம் கூறுகிறார்கள்,

ஜீவனுக்குள்ளே பரமாத்மா அந்தராத்மாவாக இருக்கிறான். ஆகவே சரீரமான ஜீவனைச் சொன்னால் பரமாத்மாவைச் சொன்னதாகிறது. இந்த பொருளில் ஜீவனே பரமாத்மா என்று சொல்லலாம். ப்ரஹ்மமாக ஆகிறான் என்பதற்கு ப்ரஹ்மத்திற்கு ஆனந்தம் ஞானம் முதலியவற்றில் ஸமமாக ஆகிறான் என்று பொருள். எனவே ஜீவன் வேறு ஈச்வரன் வேறு– இருவரும் ஒன்றே என்ற கருத்துக்கு இடமில்லை.

**140. அகண்ட வாக்யார்த்த பாதக:**

அகண்ட வாக்யார்த்தத்தை கண்டித்தவர் ஸ்வாமி.

அகண்ட வாக்யார்த்தம் – விசேஷணமில்லாமல் ஒரே அர்த்தத்தைக் கூறுபவை

ஸாமாநாதிகரண்யமுள்ள வாக்யங்கள் ஒரே அர்த்தத்தையே, எல்லாமே அகண்ட அர்த்தத்தையே போதிக்கவல்லன. ஸத்யம், ஞானம், அநந்தம் ப்ரஹ்ம– என்ற ச்ருதி வாக்கியம், எம்பெருமானின் குணங்களைச் சொல்லாமல் ப்ரஹ்மத்தை மட்டுமே சொல்லவல்லன என்பது அத்வைதம்.

பல விசேஷணங்களைக் கூறும் ஒரு விசேஷ்யத்தை முக்கியமாகக் குறிப்பிடுவதே ஸாமாநாதிகரண்யம் என்பது இலக்கணம். அதுபோல அத்வைதிகள் குறிப்பிட்ட ச்ருதி வாக்கியத்திற்கு, ப்ரஹ்மம் ஸத்யம், ஞானம் மற்றும் அநந்தம் ஆகிய குணங்களையுடையது என்றே பொருள். அகண்டம் வார்த்தியார்த்தம் என்று கூறமுடியாது

**141 . பாவரூபாஞானரோத்தா**

பாவரூபமான (உண்டு எனப்படும்) அஜ்ஞானத்தைத் தவறு என்று காட்டித் தடுத்தவர்.

பாவம் - உண்டு; அபாவம்- இல்லை.

அத்வைதிகள் அஜ்ஞானம் பாவரூபம்(உண்டு என்றே தெரிகிறது) என்றார்கள்.

ஸ்வாமி தேசிகன்,பாவரூபமான அஜ்ஞானத்தை விட்டுவிட்டு, அபாவருபமாக அஜ்ஞானத்தை ஏற்பதே உசிதம் என்று வ்யாகரண ரீதியாக(இலக்கணமுறைப்படி) நிரூபத்தார்.

**142. ஜீவாஜ்ஞான விநாசக:**

ஜீவனுக்கே அஜ்ஞானம் என்ற கருத்தை ஒழித்தவர் ஸ்வாமி.

ஜீவன் ப்ரஹ்மத்தின் ப்ரதிபிம்பமே. ஜலத்தில் தெரியும் சந்திரன் ப்ரதிபிம்பம். அதில் ஜலத்திலுள்ள அழுக்குடன் தோன்றக்கூடும். உண்மையில் சந்த்ரனில் அழுக்கு இல்லை. ப்ரதிபிம்பத்தில் தோன்றும் அழுக்கு ஜலத்திலுள்ள அழுக்கு. அதுபோன்று ஜீவனிடமே அஜ்ஞானம். ப்ரஹ்மத்திடமில்லை என்பது அத்வைதிகள் வாதம்.

ஜீவன் அநேகம் , அதனால் அவித்யை அநேகம் என்று ஸித்திக்கும். அவித்யை அநேகமானால் அதால் கல்பிக்கப்பட்ட ஜீவனும் அநேகமாகும் என்று ஒன்றை ஒன்று சார்ந்த தோஷம் உண்டாகும். இவ்வாறு பல தோஷங்கள் அத்வைத மதத்தில் உண்டு என்று ஸ்வாமி கண்டித்தார்.

**143. அவித்யாநுபபத்திஜ்ஞ:**

அவித்யா ஸ்வரூபத்தில் பொருத்தமின்மையை அறிந்து அருளியவர் ஸ்வாமி.

அத்வைதிகள் கூறுவதாவது- ஜகன் மித்யா - உலகமே பொய்; தோஷம் ஏதாவது இருந்தாலே பொய்யான பொருள் தோன்றும்; பொய்யான உலகம் தோன்ற காரணமாய் ஒரு தோஷத்தை அவித்யை கல்பிக்கவேண்டும்; அந்த அவித்யையும் பொய்யே; ஆனால் அது தோன்றக் காரணமாய் வேறொரு தோஷம் வேண்டாம். தோஷமில்லாமலேயே அது ப்ரகாசிக்கும்.

இது தவறு என்றார் ஸ்வாமி. தோஷமில்லாமலே ப்ரகாசிப்பதானால் அது ஸத்யமாகிவிடும். தோஷமில்லாமலே ஒரு பொய்யான வஸ்து ப்ரகாசிக்குமானால், பொய்யான உலகமும் தோஷமில்லாமலேயே ப்ரகாசிக்கக்கூடும். அதற்கு காரணமாய் அவித்யைக் கல்பிக்க வேண்டாமே என்று கண்டித்தார்.

**144. மாயா அவித்யா விபாகஹா**

மாயை, அவித்யை என்று பிரித்துக் கூறுவதை தப்பு என்று வாதம் செய்து வென்றவர் ஸ்வாமி.

அத்வைதிகள் மாயா மற்றும் அவித்யை இரண்டும் வெவ்வேறு என்றனர்.

பிறரை ஏமாற்ற காரணம் மாயா, இது ப்ரஹ்மத்திலுள்ளது; பொய்யான பொருளை மெய்யாகக் காட்டுவது அவித்யை, இது ஜீவனிடத்தில் உள்ளது என்றனர்.

ப்ரஹ்மத்தின் மாயை – ப்ரக்ருதியே; ஜீவனின் அவித்யை கர்மமே. இவை பொய்யானவையல்ல ; எல்லாம் ஸத்யங்களே என்பது நம் மதம்.

சித்திரத்தில் எழுதிய புருஷன் பொய்தான். அவனை யார் ஏமாற்ற நினைப்பர்? எனவே ப்ரஹ்மம் பிறரை பொய் என்று உணர்ந்தும் அவனை ஏமாற்ற நினைக்கிறது (மாயா) என்று சொல்வது மூடத்தனம். அப்படி நினைத்தால் அதுவே ப்ரஹ்மத்துக்கு அஜ்ஞானம் அல்லது அவித்யை. ஆகவே மாயா , அவித்யை இவற்றுள் வித்யாசத்தைக் கூறமுடியாது.

**145. குத்ருகுந்நீத ஸம்ஸார நிவர்த்தக நிவர்த்தக(ந):**

குத்ருஷ்டிகள் (வேதத்தை ஒப்புக்கொண்டு தவறான அர்த்தத்தை கற்பப்பவர்கள்)– அத்வைதிகள், ஸம்ஸார நிவாரகமாக (ஒழிப்பதத்திற்கு)க் கூறிய ஐக்யஜ்ஞானம் என்பதின் பொருந்தாமையை நிரூபித்தவர் ஸ்வாமி.

அத்வைதிகள் – ஐக்ய ஜ்ஞானத்தால் – அவித்யா நிவ்ருத்தி ஏற்படுகிறது – அதுவே ஸம்ஸார நிவ்ருத்திக்குக் காரணம் என்கிறார்கள்.

நம் மதம்– அத்வைதத்தில் ப்ரஹ்மம் தவிர மற்ற எல்லாம் பொய். ஆகவே ஸம்ஸார நிவர்த்தனமான ஞானமும் பொய். ஆகவே இந்த ஜ்ஞானத்தையும் நிவ்ருத்தி செய்யவேண்டும் நிவ்ருத்தி செய்யப்படவேண்டிய ஜ்ஞானம் வேறொன்றை எப்படி நிவ்ருத்தி செய்யும் ?– என்ற கேள்வி.

ஆகவே அத்வைதிகள் மோக்ஷ ஸாதனமாகக் கூறும் ஐக்யஜ்ஞானம் பொருந்தாது என்றபடி. ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# ஸ்ரீ உ. வே. அன்னாதூர் வாசுதேவாசார்ய ஸ்வாமி ஸதாபிஷேக மஹோத்ஸவம்

– டாக்டர். அன்னாதூர் மாலோல ஶடகோப தாசன்

ஸ்ரீ. உ. வே. அன்னாதூர் வாசுதேவாசார்ய ஸ்வாமி ஸதாபிஷேக மஹோத்ஸவம் காஞ்சீபுரத்தில் ஸ்ரீ மாலோல ஸம்ஸ்க்ருத வித்யாபீடம் - வேத வேதாந்த குருகுலத்தில் 20-10-2022, வியாழக்கிழமை தொடங்கி 24-10-2022 (தீபாவளி - ஐப்பசி-ஹஸ்தம்) முடிய ஐந்து நாட்கள் வெகு விமரிசையாக நடந்தேறியது.

இதன் அங்கமாக ரிக், யஜுர், ஸாம வேதம் ஆகியவற்றை வேத வித்பன்னர்கள் பாராயணம் செய்தனர். வால்மீகி ராமாயண பாராயணம், நாலாயிர திவ்யப்ரபந்த பாராயணங்களும் செய்யப்பட்டன. ஐந்து நாட்களும் நான்கு வேத பாராயணம் நடந்தது. 40-க்கும் மேற்பட்ட வேத வித்வான்கள் பாராயணத்தில் அந்வயித்து சிறப்பித்தனர். கண்களுக்கும், காதுகளுக்கும் விருந்தாக அமையப்பெற்றது. ஸாமகானம் ஆச்சரியமாக இருந்தது. அனைவரும் ஆனந்தத்தில் ஆழ்ந்தனர். க்ரந்த பாரயணத்தில் அநேகம் ஸ்வாமிகள் அந்வயித்தனர். மொத்தத்தில் ஏராளமான வித்வான்கள் பங்கேற்று, வானமே வேதசப்தத்தினல் சூழப்பட்டு இருந்தது.

பாராயணங்கள் நடந்த ஐந்து நாட்களிலும், ஸதாபிஷேகத்தன்றும் க்ருஹத்தின் ஆராத்யமூர்த்திகளுக்கு விசேஷ பக்ஷணங்களுடன் தளிகை கண்டருளப் பண்ணப்பட்டது. பாராயண நாட்களில் சுமார் 100 பேருக்கு மேலும் ஸதாபிஷேகத்தன்று சுமார் 500 பேருக்கு மேலும் அந்வயித்தனர். அவ்வப்பொழுது பால், பழம், பாதாம், முந்திரி, உலர்ந்த திராட்சை பாராயணக்காரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது. வேதபாராயணம் க்ரந்த பாராயணம் செய்த ஸ்வாமிகளுக்கு வெகுவாக ஸம்பாவனையும் செய்யப்பட்டது.

முதல் நாளான 20/10/2022 அன்று கும்ப ஆவாஹனத்துடன், வேத-க்ரந்த பாரயணங்கள் உபக்ரமிக்கப்பட்டு, ஸதாபிஷேக மஹோத்ஸவம் விமரிசையாக தொடங்கிற்று. பிரதி தினமும் காலை மாலை இரு வேளைகளும் வேத-க்ரந்த பாராயணாதிகளுடன் கும்ப

அர்ச்சனைகளும் நடைபெற்றன. 20/10/2022 அன்று மாலை, ஸ்ரீ உ.வே. கருணாகராசார்ய ஸ்வாமி ஸ்வஸ்திவாசனத்தில் வரதன் என்ற தலைப்பில் உபந்யசித்தார். அநேகம் உள்ளூர்வாசிகள் மற்றும் வேதவித்பன்னர்கள் அதைக் கேட்டு ஆனந்தம் அடைந்தனர். அன்று இரவு பரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. ப்ரபாவதி ஹரிஹரன், ஸ்ரீ மஹாலக்ஷ்மி ந்ருத்யாலயா-நாட்டியப்பள்ளி அவர்களின் சிஷ்ய ஶிகாமணிகள் - சிறு குழந்தைகள் மிகவும் அருமையாக அபிநயம் பிடித்து ஆடியதை அரங்கத்தில் அனைவரும் பாராட்டி வியந்தனர்.

இரண்டாம் நாளான 21/10/2022 அன்று மாலை, கலைமாமணி ஸ்ரீ உ. வே. கல்யாணபுரம் ஆராவமுதாசார்ய ஸ்வாமி, சுந்தரகாண்ட ஸாரம் - ஹரிகதா காலக்ஷேபம் நிகழ்த்தினார். அன்றிரவு ஸ்ரீ. பரத் நாராயன் குழுவினர் கர்நாடக சங்கீத கச்சேரி செய்து அனைவரது பாராட்டுதல்களையும் பெற்றார். மூன்றாம் நாளான 22/10/2022 அன்று மாலை ஸ்ரீ உ. வே. நாவல்பாக்கம் கண்ணன் (யஞ்யம்) ஸ்வாமி, ஹஸ்திகிரி சம்புவில் சில அனுபவங்கள் என்ற தலைப்பில் உபன்யாசம் சாதித்தார். அன்று இரவு, வயலின் வாத்ய வித்யா விஶாரத ஸ்ரீ. அஶோக். ஜி. குர்ஜாலே, ஆரபி-சென்டர் ஃபார் பெர்ஃபார்மிங்க் ஆர்ட்ஸ், ஹைதரபாத் அவர்களது சிஷ்யர்களுடன் வயலின் கச்சேரி நிகழ்த்தினார். கேட்பதற்கு இனிமையாக இருந்தது பேரருளாளன் நன்றாக செவி சாய்த்தான்.

நான்காம் நாளான 23/10/2022 அன்று கும்பத்திற்கு விசேஷ பூஜைகள் செய்யப்பட்டு யதாஸ்தானம் செய்யப்பட்டது. ததீயாராதனத்திற்க்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்று அநேக உள்ளூர்வாசிகள் வந்திருந்து ஸ்வாமியின் அருளாசியைப் பெற்றுச் சென்றனர். அன்று சுமார் இரண்டரை மணி அளவில் ஸ்ரீ உ. வே. தி. ந. ஆராவமுத தாதாசார்ய ஸ்வாமி சிஷ்யர்கள் (ஸ்ரீ ஹயக்ரீவ வித்யாபீடம், தரமணி) ஸம்ப்ரதாய விஷய காலக்ஷேபம் செய்தனர். அன்று மாலை ப்ரதிவாதி பயங்கரம், ஸ்ரீ உ. வே. ராஜஹம்ஸம் ஸ்வாமி அருளாளனும் ஆழ்வானும் என்ற தலைப்பில் உபந்யசித்தார்.

அன்றைய தினம் இந்த மஹோத்ஸவத்தின் பல சிறப்பு அம்ஶங்களில் ஒன்றான புத்தக வெளியீடு நடைபெற்றது. இவ்விழாவின் நடுநாயகமான நமது ஸ்வாமி பல நூல்களையும் வ்யாஸங்களையும் எழுதி வைணவ உலகிற்கு அரும் தொண்டு

ஆற்றி உள்ளார். அவர் தம் படைப்புகளில் சில ரத்னங்களை தொகுத்து சதாபிஷேக வைபவ பிரகாஶிகா என்ற தொகுப்பு மலர் வெளியிடப்பட்டது. ஸ்ரீ உ. வே. தி. ந. ஆராவமுத தாதாசார்ய ஸ்வாமி புத்தகத்தை வெளியிட முதல் பிரதியை ஸ்ரீ. உ. வே. கோதண்டராமன் சுவாமி பெற்றுக்கொண்டார். அவ்வமயம் ஸ்ரீ. விக்ரமன் ஸ்வாமி (ஆடிட்டர்) அவர்கள் இயற்றிய 'ஸ்ரீ தேஶிக ஶதகம்' என்ற நூலும் வெளியிடப்பட்டது. அன்று இரவு, காஞ்சி காமகோடி பீடம் ஆஸ்தான வித்வான் ஸ்ரீ U.P. ராஜு - ஸ்ரீமதி. U.நாகமனி அவர்களின் மேண்டலின் கச்சேரி நடந்தது. கேட்பவர்களுக்கு கர்ணாம்ருதமாக இருந்தது அனைவரும் வெகுவாக பாராட்டினர்.

24/10/2022 ஐப்பசி ஹஸ்தம் அன்றைய தினம் தீபாவளி, ஸ்வாமியின் சதாபிஷேக திருநக்ஷத்ரம். லோகமே அதைக் கொண்டாடுவது போன்று அமைந்திருந்தது. ஸ்வாமி காலையில் திருவாராதனத்தை முடித்துக்கொண்டு ஸகுடும்ப சமேதராய் பெரியபிராட்டி-பேரருளாளனை மங்களாசாசனம் செய்து அவர் அருள் பெற்றார். அன்றைய தினம் பாராயணங்கள் சமாபனம் செய்யப்பட்டு கும்பத்திற்கு விசேஷ பூஜைகள் ஆர்த்திகள் செய்யப்பட்டது. பிறகு ஸ்வாமி தம்பதி சமேதராய் நூதன ஸ்வர்னம் பதித்த ஸஹஸ்ரதாரையினால் அபிஷேகம் கண்டருளினார். அதன் பிறகு நூதன வஸ்த்ரங்களை தரித்து ஸ்வாமி மண்டபத்திற்கு எழுந்தருளி அஹோபிலமடம், ஸ்ரீரங்கம், திருமலை, பெருமாள் கோவில், மேல்கோட்டை, ஸ்ரீவில்லிபுத்தூர் முதலான சுமார் 25 திவ்யதேசங்களின் மாலை-பரிவட்டம் சுவாமிக்கு சாத்தப்பட்டன.

அஸ்மத் சுவாமி விழாவிற்கு வந்த அனைவரையும் விசாரித்து ததீயாராதனத்தில் அந்வயிக்க செய்தாயிற்று. ஸ்வாமியின் தர்மபத்னி ஸ்த்ரீகளுக்கு தாம்பூலம் கொடுத்து அனைவரையும் அகமகிழ உபசரித்தார். இந்த அளவிலான ஒரு ஸதாபிஷேக மஹோத்ஸவம் எங்கும் நடந்து கண்டதில்லை என்று எல்லோரும் புகழும்படியாக அமைந்தது.

24/10/22 அன்று மாலை தேஶிக தீபாவளி என்ற தலைப்பில் வாசஸ்பதி, முகுந்தகிரி, வங்கீபுரம் ஸ்ரீ உ.வே.அனந்தபத்மநாபாசார்ய ஸ்வாமி உபன்யாசம் சாதித்தார். அதன்பிறகு ஸ்வாமியின் பௌத்ரிகளான ஆதம்பாக்கம் சகோதரிகள் Sow.K.ஶ்ருதி -

Sow.K.வர்ஷா அவர்களின் இசை கச்சேரி நடந்தது. அதன்பிறகு சுவாமியின் பௌத்ரர்களான வி.ஆர்.பிரதர்ஸ் Chi.மா.ஸ்ரீநிவாஸராகவன் - Chi.மா.ப்ரஹ்லாதவரதன் ஆகியோரின் வயலின்/வாய்ப்பாட்டு கச்சேரி நடைபெற்றது.

நித்யான்னதாதா தருணாக்நிஹோத்ரி வேதாந்தவித்
சந்த்ரஸஹஸ்ரதர்ஶீ ।
மாஸோபவஸீ ச பதிவ்ரதாஸ்ச ஷட் ஜீவ லோகே மம வந்தநீயா: ।।

தினமும் அன்னதானம் செய்பவர், நித்யா அக்னிஹோத்ரம் செய்பவர், வேத சாஸ்திரம் கற்றுணர்ந்து அதன்படி நடப்பவர், ஆயிரம் பிறை கண்டவர், திதிகள் தவறாது உபவாசம் இருப்பவர், கணவனுக்கு பணிவிடை செய்யும் பதிவ்ரதா ஶிரோமணிகள் ஆகிய ஆறு பெரியவர்களை பகவான் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா ஸதா வணங்குகிறான். இப்படியாக ஸதாபிஷேகம் செய்துகொண்ட மஹநீயர்களை பகவனே கொண்டாடுகிறான்.

ஆயிரம் பறை கண்ட ஆத்ம குணவாரிதியான அஸ்மத் ஆசார்ய வள்ளல் மாடபூசி ஸ்ரீ உ. வே அன்னாதூர் வாசுதேவாசார்ய ஸ்வாமியின் ஸதாபிஷேக மஹோத்ஸவம் காஞ்சிபுரத்தில் நம் ஸ்வாமியால் வேத ஶாஸ்த்ர சமஸ்கிருத ஆபிவ்ருத்திக்காக நிறுவப்பெற்ற ஸ்ரீ மாலோல ஸம்ஸ்க்ருத வித்யாபீடத்தில் வெகுகோலாகலமாக இதற்கு முன் இப்படி நடந்ததில்லை என்றபடியாக வெகு விமரிசையாக ஸ்வாமியின் சிஷ்யர்கள், ஆப்தர்கள், குமாரர், குமாரத்தி மற்றும் பந்துக்கள் எல்லோராலும் ஒன்று கூடி நடத்தப்பெற்றது. இம்மஹோத்ஸவமானது அனைவரையும் வியப்பிலும் ஆநந்தத்திலும் ஆழ்த்தியது. அனைவரும் ஸ்வாமியின் அனுக்கிரகத்தைப் பெற்று ஆனந்தித்து க்ருதார்த்தர்களானார்கள்.

Published by N.S. Gandamani on behalf of Seva Swamy Memorial Foundation, from No.10 Lakshmipuram, II Street, Villivakkam, Chennai - 600 049 and printed by B. Paramasivan, at Basi Printers, Soni Complex, No.19/8-A, Reddy Street, Villivakkam, Chennai 600 049. Editor N.S. Gandamani.Website : www.sevaonline.org E-Mail : seva@sevaonline.org

ஸ்ரீ:

# ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ம ஸ்வாமி திருக்கோயில்

## பழைய சீவரம், காஞ்சிபுரம் மாவட்டம்

# மஹா ஸம்ப்ரோக்ஷண
# ஆஹ்வான பத்திரிகை

நிரவதிக குணாப்தே ஸ்ரீ ந்ருஸிம்ஹஸ்ய திவ்யம்
வபுரநகமுபாஸ்ய ப்ராப்தவான் மோக்ஷமத்ரி: ।
ஸது கமலமஹீந்த்ரோ ப்ராப்ய நித்யம் ஸபர்யாம்
ஸகல மநுஜ நேத்ராநந்த பாத்ரம் பபூவ ।।

எங்குமுளன் கண்ணனென்ற மகனைக் காய்ந்து
இங்கில்லையால் என்றிரைன் தூண்புடைப்ப
அங்கப் பொழுதே அவன் வீயத் தோன்றிய என்
சிங்கப்பிரான் பெருமை யாராயும் சீர்மைத்தே.

ஸ்ரீயப்பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய், அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹ ஸ்வரூபியாய் ஸகல சைதன்ய பக்த கோடிகளையும் ரக்ஷிக்கும் பொருட்டு க்ஷீரநதி (பாலாறு), பாஹுநதி (செய்யாறு), வேகவதி ஆகிய மூன்று நதிகளும் ஸங்கமமாகிற தக்ஷிண த்ரிவேணீ ஸங்கமத்தின் வடகரையில் அமைந்துள்ள ஜீயர்புரமென்றும், ஸ்ரீபுரமென்றும் பெயர் கொண்ட பழைய சீவரத்தில், ஸ்ரீ பத்மகிரி என்று அழைக்கப்படும் மலையில் ஸ்ரீ அத்ரி மஹரிஷிக்கு ஸேவை ஸாதித்தபடி திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் ஸ்ரீ அஹோபிலவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீ லக்ஷ்மீ நாஸிம்ம ஸ்வாமிக்கு பக்த, பாகவதர்களின் விருப்பப்படியும், ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ம ஸ்வாமியின் பரிபூர்ண அனுக்ரஹத்துடன் நிகழும் சுபக்ருது வருஷம் கார்த்திகை மாம் 16ம் தேதி (02-12-2022) வெள்ளிக்கிழமை, சுக்ல தசமி திதி உத்திரட்டாதி நக்ஷத்ரம் , சித்தயோகம் கூடிய சுபதினத்தில் காலை 9-30 மணிக்கு மேல் 10-30 மணிக்குள் மகர லக்னத்தில் மஹா ஸம்ப்ரோக்ஷணம் ஸ்ரீ வைகானஸ பகவத் சாஸ்த்ர ஆகம விதிப்படி அங்குரார்ப்பணம் தொடங்கி, நிகழ்ச்சி நிரலில் கண்டவாறு நடைபெறுகிறபடியால், பகவத் பாகவத மஹா ஜனங்கள் அனைவரும் மஹா ஸம்ப்ரோக்ஷண வைபவங்களில் கலந்து

கொள்டு ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ம ஸ்வாமியின் பரிபூர்ண க்ருபா கடாக்ஷத்தைப் பெற்று உலகில் அனைத்து செல்வங்களையும் பெற்று, வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறோம்.

இநத மஹா ஸம்ப்ரோக்ஷண வைபவம் ப்ரக்ருதம் ஸ்ரீமத் அழகிய சிங்கர், ஸ்ரீமதே ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ரங்கநாத யதீந்த்ர மஹாதேசிகனின் பூரண அனுக்ரஹத்துடனும், ஜகத்குரு ஸ்ரீமத் வல்லபாச்சார்ய மஹாப்ரபு பீதாதீஸ் கோஸ்வாமி 108 ஸ்ரீ விசால் குமார்ஜி மஹோதய், ஸ்ரீ விட்டல்தாஸ்ஜி மந்திர், சென்னை அவர்களும் அன்வயிக்க இசைந்துள்ளார்.

மேலும் உயர்திரு ஜெ. குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள், ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, சென்னை, உயர் திருமதி இரா. வான்மதி எம்.எல், இணை ஆணையர் அவர்கள், இந்து சமய அறநிலையத் துறை, காஞ்சிபுரம், உயர்திரு ஆ. முத்துரத்தின வேலு அவர்கள், உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, காஞ்சிபுரம், உயர்திருமதி டாக்டர் மா. ஆர்த்தி, இ.ஆ.ப, அவர்கள், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உயர் அதிகாரிகள், ப்ரமுகர்கள் பலரும் பங்கேற்க உள்ளனர். அடியார்கள் அனைவரும் திரளாக கூடியிருந்து ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ம ஸ்வாமியின் பரிபூர்ண அருள் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அறங்காவலர்கள மற்றும் திருப்பணிக் குழு உறுப்பினர்கள்
**ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ம ஸ்வாமி திருக்கோயில், பழைய சீவரம்**

---

## திருப்பணிக்குழு உறுப்பினர்கள்

**ஸ்ரீ கோவிந்த தாஸ் புருஷோத்தம் தாஸ்** அறங்காவலர் குழுத் தலைவர் (944282721)

**ஸ்ரீ மதுரா தாஸ் ஹரிதாஸ்** அறங்காவலர் (9884034359)

**ஸ்ரீ சுரேந்திர குமார் வி. ஷெராப்** அறங்காவலர் (9884436870)

மேலும் விவரங்களுக்கு: **ஸ்ரீ என்.எஸ். கண்டாமணி** (கோயில் திருப்பணிக் குழு உறுப்பினர்) 9841046264 என்ற எண்ணில் அணுகவும்.

**குறிப்பு :** பழைய சீவரம் சென்கையிலிருந்து 65 கி.மீ தொலைவில் உள்ளது. செங்கல்பட்டிலிருந்தும், காஞ்சிபுரத்திலிருந்தும் பேருந்திலோ அல்லது ரயிலிலோ, பழைய சீவரத்திற்கு பயணம் செய்யும் வசதி உண்டு. சென்னையிலிருந்து பழைய சீவரத்திற்கு வருபவர்கள் செங்ல்பட்டு வழியாகவோ அல்லது படப்பை - ஒரகடம் வழியாகவோ வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# முனி வேழமும் கவி ஸிம்ஹமும்

(ஸ்ரீமதிலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம்)

**சுலோகம் 74**

கரதலாமலகீக்ருத ஸத்பதா:
ச்ருதி வதம்ஸித ஸூந்ருத ஸூக்தய: ।
திவஸ தாரகயந்தி ஸமத்ஸராந்
யதி புரந்தர ஸப்ததி ஸாதரா: ।।

ஸ்ரீபாஷ்யகாரரின் ஒப்பற்ற பெருமையை விளக்கி, ஆர்வமுடன் இந்த 'யதிராஜ ஸப்ததி'யை அனுஸந்தானம் செய்பவர்கள் அடையும் பயனையும் இந்த சுலோகத்தில் பெருமைப்பட கூறுகிறார்.

ஸ்வாமி தேசிகன் தனது மாதுலர் ஆத்ரேய ராமானுஜரிடம் வேத, வேதாந்தங்களையும், பிற சாஸ்த்ரங்களையும், ஸம்ப்ரதாயங்களையும் கசடறக் கற்றதோடு அல்லாமல் அதன் படி திகழ்ந்தார். ஆசார்யத் தன்மைக்கே எல்லை நிலமாக விளங்கிய யதிராஜருடைய ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களே தனக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தது, எனவே ஸ்ரீபாஷ்யகாரரின் பெருமையை இதயத்தில் அடங்காத பக்தி வெள்ளத்தில் துதிக்கிறார். எனவே இந்த யதிராஜ ஸப்ததியை ஆர்வமுடன் அனுசந்திப்பவர்களுக்கு, எம்பெருமானாருடைய திவ்ய திருமேனி, திவ்ய மங்கள விக்ரஹம் அமைப்பு, அவர் ஸ்ரீஸூக்திகளின் பெருமைகள், சேதனர்களிடம் உள்ள கருணையின் ப்ரபாவம், அநாதியான இவருடைய ஸித்தாந்தம், இவர் ஸ்ரீஸூக்திகளை நன்கறிந்தவர் பிற மதத்தில் ஏறிட்டும் பாரா தன்மை, இவர் திருவடி பட்ட தெருப் புழுதியின் மஹிமை, சேதனர்களை மோக்ஷ உபாயத்தில் மூட்டி, எம்பெருமானின் இரு விபூதிகளையும் (நித்ய, லீலா விபூதிகள்) நன்கு அறியச் செய்து ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுபட்டு மீண்டும் பிறவாதிருத்தல், 'உய்ய ஒரே வழி உடையவர் திருவடி' என்று இவர் வழியைக் கடைபிடித்தால் பேரின்பம் பெறுதல், பிற மதத்தினரை எளிதில் வெல்லும் திறன் மற்றும் பல உயர் கருத்துக்கள் புதையல் போன்று பொதிந்துள்ளதை நன்கு அனுபவிப்பர். இவரது ஸித்தாந்த கருத்துக்கள் சிரோ பூஷணமாகத் தலையாலே தாங்கிக் கொண்டாடத் தக்கவைகள்.

இத்தகு பெருமையை வணங்கி, குறிப்பிட்ட இடமான மோக்ஷத்தை அடையலாம். ஏறுமுகம் தானே நமக்கு. இதை ஏன் செய்ய வேண்டும்? ஸ்வாமி தேசிகனின் கருத்தைக் காண்போம்.

என்னுயிர் தந்தளித்தவரைச் சரணம் புக்கி
யானடைவே அவர் குருக்கள் நிரை வணங்கி
பின்னருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்
பெரியநம்பி ஆளவந்தார் மணக்கால் நம்பி
நன்னெறியை அவர்க்குரைத்த உய்யக்கொண்டார்
நாதமுனி சடகோபன் சேனை நாதன்
இன்னமுதத் திருமகள் என்றிவரை முன்னிட்டு
எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே.

என்று சொன்னால் மட்டும் போதுமோ? ப்ரபந்தங்களை சேவித்தும், ஆழ்வார், எம்பெருமானார், தேசிகன் திருவடிகளே சரணம் என்று சொல்ல வேண்டும்.

ஸ்ரீமாந்வேங்கடநாதார்ய: கவிதார்க்கிக கேசரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ।।

என்ற தனியனைச் சொல்லிவிட்டால் எல்லா ஆசார்யர்களையும் சொன்ன மாதிரி ஆகிவிடும். ஸகல ஆசார்யர்கள் சொரூபம்தானே தேசிகன். குருபக்தி புஷ்டியாகி வளர, குருவைப் ப்ரகாசப்படுத்த வேண்டும். இப்படி செய்யச் செய்ய நல்வழிகள் எல்லாம் உள்ளங்கை நெல்லிக் கனி போல் நமக்கு அறியாத அர்த்தங்காளும் அறியப் பெறுவோம்.முடிவில் ஸ்ரீதேசிகன் தம் ஆசார்யனது உபதேசத்தால், தனது மானசீக ஆசார்யரான ஸ்ரீபாஷ்யகாரரின் ஸ்ரீஸூக்திகளை நன்கு அறிந்தததால் தமது அறிவுக்குள்ள பெருமையைக் கூறிப் பெருமையுடன் மகிழ்கிறார். இத்தகைய பெருமைகளைப் பெற்றவர்களைக் கண்டு பொறாமைப்படும் பிற வாதிகள் முகத்தில் பொலிவிழந்து பகலில் காணப்படும் நக்ஷத்திரங்கள் போலே ஒளி மழுங்கி வாளா நிற்குமாறு செய்கின்றனர் என்று கூறி இந்த ஸப்ததியைத் தலைக்கட்டுகிறார். என்னே ஸ்ரீஸூக்திகளின் பெருமை! இவ்வாறான ஆசார்ய வள்ளல்களுக்கு நாம் நமது நன்றிக் கடனைக் காட்ட ஒரே வழிதானுண்டு. அவர் திருவடிகளில் ஸர்வ தேச ஸர்வ காலமும் 'இன்னுமொரு நூற்றாண்டிரும்' என்று ப்ரார்த்தித்துக் கொண்டு அவர்கள் திருவுள்ளம் உகக்கும்

செயல்களையே செய்வோம் என்று ப்ரதிக்ஞை எடுத்துக் கொள்வதேயாம். நம் ஸம்ப்ரதாயத்திற்கும் ஸநாதன தர்மத்திற்கும் தூண்கள் போல் விளங்குகின்ற ஸ்ரீராமானுஜர், ஸ்வாமி தேசிகன் திருவடிகளில் தாழப் பணிந்து கைங்கர்யத்தை நன்கு பூர்த்தி செய்து கொடுத்த உபகாரத்தை என்னென்று சொல்வது. தலையல்லால் கைமாறில்லை.

பொருளல்லாத இந்த சிறியேனையும் இப்படியொரு கைங்கர்யத்தில் கருவியாக்கிக் கொடுத்த அடியேன் தாயாரின் ஆசீர்வாதங்களும், அடியேனுக்கு அறிவுரை கூறி, உற்சாகத்தைக் கொடுத்த ஸ்ரீ M.K. ஸ்ரீநிவாஸன் ஸ்வாமியின் ஊக்குவிப்பும்தான் எனக்கு இந்த பெரும் பங்கிற்கு வழி வகுத்தது. மேலும் ஸ்ரீசேஷாத்ரி ராஜகோபாலன் ஸ்வாமியின் உதவியும் அடியேனுக்கு மிகவும் அனுகூலமாக இருந்தது. அனைவருக்கும் தெண்டன் ஸமர்ப்பித்து க்ருதக்ஞதையைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடியேனுக்கு ஊக்கம் கொடுத்த வாசகர்களுக்கும், அனைத்திற்கும் முத்தாய்ப்பாக உள்ள ஸ்ரீதேசிக ஸேவா பத்திரிகைக்கும் அடியேனது நன்றி உரித்தாகுக.

---

## வேண்டுகோள் - சந்தாதாரர்களுக்கு...

ஸேவா ஸ்வாமியின் அபிலாஷைப்படி, உரிய நேரத்தில் சந்தாவை புதுப்பிக்காதவர்களுக்கும், ஸ்ரீ தேசிக ஸேவா தொடர்ந்து அனுப்பப்பட்டு வருகிறது. ப்ரதி மாதமும் சந்தாவைப் புதுப்பிக்க வேண்டுகோளும் விடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை இந்த வருஷத்திய (சுபக்ருத் - 2022-23) சந்தாவை செலுத்தாதவர்கள் உடனடியாக சந்தாவை செலுத்துமாறு வேண்டுகிறோம். சந்தாவைப் புதுப்பித்தவர்களுக்கு மட்டுமே ஸ்ரீ தேசிக தர்சன பஞ்சாங்கம் அனுப்ப இயலும்.

மேலும், விலாச மாற்றங்களை உடனடியாக தெரிவிக்கும்படியும் வேண்டுகிறோம். தவிர்க்க முடியாத காரணங்களினால் சந்தாவைத் தொடர முடியாதவர்களும் உடனடியாக எங்களைத் தொடர்பு கொண்டு, விவரங்களைத் தெரிவிக்குமாறு வேண்டுகிறோம்

# கீதார்த்தம்

## பனிரெண்டாவது அத்யாயம்

(பையம்பாடி சேட்டலூர் ஸ்ரீ. ராகவாசார்யன், நங்கநல்லூர், சென்னை - 61)

ஸ்வாமிஸ்ரீபாஷ்யகாரர் 12ம் அத்யாயத்தின் அவதாரிகையில், பக்தியோகநிஷ்டானாம் ப்ராப்யபூதஸ்ய பரஸ்ய ப்ரஹ்மணோ பகவதோ நாராயணஸ்ய நிரங்குச ஐச்வர்யம் ஸாக்ஷாத்கர்துகாமாய அர்ஜுனஸ்ய அனவதிகாதிசய காருண்ய ஔதார்ய ஸௌசீல்யாதி குணஸாகரேண ஸத்யஸங்கல்பேன பகவதா ஸ்வைச்வர்யம் யதாவதவஸ்திதம் தர்சிதம் என்று விச்வரூப தர்சனத்தை காண்பக்கும் 11ம் அத்யாயத்தின் ஸாரத்தை அருளிசெய்கிறார். அதாவது - பகவான் உபதேசித்தருளிய விஷயத்தை பக்தியோகத்தில் நிஷ்டையை உடையவர்களுக்கு அடையத் தக்கவராகியும், பரப்ரஹ்மமாகியும், பகவானாயும் இருக்கிற நாராயணனுடைய தடங்கல் இல்லாத ஐச்வர்யத்தை நேராகப் பார்க்க வேண்டும் என்கிற ஆசையையுடைய அர்ஜுனனுக்கு எல்லையில்லாத மேன்மையையுடைய காருண்யம் ஔதார்யம் ஸௌசீல்யம் முதலான குணங்களுக்கு இருப்பிடமாயும் ஸத்யஸங்கல்பனாயும் இருக்கிற பகவானால் தன்னுடைய ஐச்வர்யம் உள்ளபடியே காண்பிக்கப்பட்டது - என்று. பனிரெண்டாம் அத்யாயத்தில், பக்தியோகம் சிறந்தது என்றும், பக்தியோகம் பண்ண முடியாதவனுக்கு ஜ்ஞான - கர்மயோகங்களுக்கு வேண்டிய குணங்களும், பக்தியோகம் செய்பவனிடத்தில் பகவானுக்குள்ள அளவற்ற ப்ரீதியும் சொல்லப்படுகின்றது. அர்ஜுனன் கேட்பதாக தொடங்குகின்றது இந்த அத்யாயம். ஏவம் ஸததயுக்தா யே பக்தாஸ்த்வாம் பர்யுபாஸதே । யே சாபி அக்ஷரமவ்யக்தம் தேஷாம் கே யோகவித்தமா: ।। என்று முதல் சுலோகம். எம்பெருமான் கண்ணனிடம் என்றுமே பகவானை பெற்றிருக்க விரும்பி பஜனம் செய்பவர்கள் சிறந்த யோகிகளா? அல்லது ஜீவாத்மாவை உபாஸனம் செய்பவர்கள் சிறந்தவர்களா? என்று வினவுகிறான். மய்யாவேச்ய மனோ யேமாம் நித்யயுக்தா உபாஸதே । ச்ரத்தயா பச்யோபேதாஸ்தே மே யுக்ததமா மதா: ।। என்று இரண்டாவது சுலோகத்தில் பகவான் பதிலருளிச் செய்கிறார். அதாவது -

எப்பொழுதும் ச்ரத்தையுடன் கூடினவனாக தன்னுடனே சேர்ந்திருக்க விரும்பி தன்னிடத்தில் மனதை வைத்து 'எம்பெருமானே அடையவேண்டியவன்' என்று எண்ணி எவர்கள் உபாஸிக்கின்றனரோ அவர்களே சிறந்த யோகிகள் என்று. மேலும் யே த்வக்ஷரம் அனிர்தேச்யம் அவ்யக்தம் பர்யுபாஸதே - ஸம்நியம்யேந்த்ரியக்ராமம் - ஆகிய இரண்டு சுலோகங்களால் விவரிக்கிறார். ஸ்வரூபத்தில் மாறுதல் அடையாததும், இந்த்ரியங்களுக்கு இலக்காகாததும், எங்கும் இருப்பதும், இன்னது என்று அறிய முடியாததும், அழிவற்றதுமான ஆத்ம ஸ்வரூபத்தை 'இந்த்ரியங்களை அடக்கி எல்லா ஆத்மாக்களையும் ஸமமாகக்கொண்டு எல்லா ப்ராணிகளுக்கும் நன்மை செய்வதில் நோக்குள்ளவராய் (தீமையை எவருக்கும் செய்யாமல்) உபாஸிக்கின்றனரோ அவர்களும் தன்னை அடைவர்' என்கிறார். க்லேசோதிகதர: என்ற 5வது சுலோகத்தில், அனாதிகாலமாக தேஹமே ஆத்மா என்ற துர்வாஸனை ஏறியிருப்பதால் தேஹத்தைவிட வேறான ஆத்ம ஸ்வரூபத்தை யோகத்தில் சிந்தித்து பெறுவதில் மிகுந்த ப்ரயாசையே. யே து ஸர்வாணி கர்மாணி - தேஷாமஹம் ஸமுத்தர்த்தா ஆகிய 6-7வது சுலோகங்களினால், ஜீவயோகிகளைப் போலல்லாமல் தன்னையே அடைய வேண்டியவனாகக் கொண்டு வேறு பலனுக்காக அல்லாமல் பக்தியோகத்தினால் தன் விஷயமான த்யானம், பூஜை, ப்ரணாமங்கள் எல்லாம் செய்கின்றனரோ - அவர்கள் விஷயத்தில் தாமதமின்றி விரைவிலேயே அபாயகரமான ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்திலிருந்து கரையேற்றுகின்றவனாக ஆகிறேன் என்கிறார். மய்யேவ மன ஆதத்ஸ்வ என்று தொடங்கும் 8வது சுலோகத்தில், தன்னிடத்திலேயே நிலையான மனதை வைத்து புத்தியைக்கொண்டு நானே (பகவானே) அடைய வேண்டியவனாக செய்த த்யானம் பூர்த்தியான பிறகு தன்னிடத்திலேயே வஸிப்பர் என்கிறார். இந்த பூலோகத்திற்கு திரும்பிவர நேரிடுமோ என்கிற ஐயம் துளியுமில்லை. அத சித்தம் ஸமாதாதும் என்கிற 9வது சுலோகத்தில், மனதை யோகத்தில் ஆழ்த்த முடியாவிட்டால் தன் விஷயமான ஆராய்ச்சியாம் உபாயத்தினாலே தன்னை பெற விரும்பும்படி சொல்கிறார். இங்கு சுலோகத்தில் பகவான் கண்ணன் அருளிச்செய்யும் மாம் எனும் பதத்திற்கு ஸ்வாமிஸ்ரீபாஷ்யகாரர்

எல்லையில்லாத மேன்மையையுடையதாய் இருக்கிற ஸௌந்தர்யம், ஸௌசீல்யம் ஸௌஹார்தம் வாத்ஸல்யம் காருண்யம் மாதுர்யம் காம்பீர்யம் ஔதார்யம் சௌர்யம் வீர்யம் பராக்ரமம் எல்லாவற்றையும் அறிந்தவனாக இருக்கை, ஸத்யகாமனாக இருக்கை, ஸத்யஸங்கல்பனாக இருக்கை, எல்லாவற்றிர்கும் ஈச்வரனாக இருக்கை எல்லாவற்றிற்கும் காரணமாக இருக்கை, முதலான கணக்கிலடங்காத குணங்களுக்கு இருப்பிடமாயும், எல்லா கெட்ட குணங்களுக்கும் விரோதியாயும் இருக்கிற என்னிடத்தில் என்று பாஷ்யமிட்டருளுகிறார். அப்யாஸேபி அஸமர்த்தோஸி என்கிற 10வது சுலோகத்தில், பகவானுடைய கல்யாணகுணங்களின் சிந்தையில் சக்தி இல்லாதனாகில், தன் விஷயமான அர்ச்சனை முதலானவைகளை விசேஷமாகச் செய்வதும், கோவில் கட்டுவது, தோட்டம் அமைப்பது, பூஜிப்பது முதலானவற்றை செய்வதும் படிப்படியாக பலனைப் பெறுவதற்கு வழி என்றருளிச் செய்கிறார். அதைததபி அசக்தோஸி கர்தும் மத்யோகமாச்ரித: என்கிற 11வது சுலோகத்தில், பக்தியோகத்திற்கு அங்கமாக மேற்கூறியவற்றில் ஒன்றையும் செய்ய முடியாது போனால், மனதை அடக்கியவனாய் ஜீவாத்ம த்யானத்திற்காக மனதை திருத்துகின்றவனாய், எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் நித்ய - நைமித்திக கர்மாக்களை செய்து கொண்டு வருமாறு கூறுகிறார். (தொடரும்)

---

# மஹனீயர்களின் மறைவு

**ஸ்ரீ வி.என். வேங்கடநாதன் ஸ்வாமி -** நம் தேசிக ஸம்ப்ரதாயத்திற்கு பெரும் தூணாய் இருந்த இந்த ஸ்வாமியின் மறைவு ஈடு செய்ய முடியாதது. ஸேவா ஸ்வாமியிடம் மிகுந்த ப்ரதிபத்தி கொண்டிருந்தவர். லௌகிக ரீதியாக பெரிய உத்யோகத்தில் இருந்தாலும், ஸம்ப்ரதாய விஷயங்களில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தவர். அவருடைய குடும்பத்தார்க்கு அடியோங்களின் அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

**ஸ்ரீ உருப்பட்டூர் சேஷாத்ரி ஸ்வாமி** - மணிமண்டப உத்ஸவங்களில் பெரும் ஈடுபாடு கொண்டவர். பிராமணர் சங்கம், தெய்வீக சங்கம் போன்ற பல அமைப்புகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு ஸேவை செய்தவர். இவரின் மறைவு நம் ஸமுதாயத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பு என்பதில் ஐயமில்லை. அவரது குடும்பத்தார்க்கு அடியோங்களின் அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

# ஸ்ரீ தேசிக ஸேவா

(ஸ்ரீ தேசிக தர்சன மாதப் பத்திரிகை - *தற்பொழுது அதிக பக்கங்களுடன்...*)

ஆஸ்திகர்களுக்கு இக்காலத்தில் குறைவில்லை. ஆனால் ஆஸ்திகத்தை வளர்த்துக் கொள்ள போதுமான வசதிகள் இல்லை. இந்நிலையில் ஒரு சில தர்ம கார்யங்கள் ஒவ்வொரு விதத்திலும் நடைபெற்று வருகின்றன. இக்காலத்தில் பல விதமான கூற்றுக்களுக்கேற்ப ஆஸ்திகர்களுக்கேற்ப விடையளிக்க அல்லது ஸந்தேகத்தை தீர்க்க எந்த விதமான அமைப்புகளும் இல்லை. மஹான்களுடைய அனுக்ரஹத்தால் சிற்சில ஸம்ப்ரதாய மாதப் பத்திரிகைகள் ஆஸ்திகத்திற்கு தூண்டுகோலாய் அமைந்திருக்கின்றன என்பது மறுக்கவும் மறைக்கவும் முடியாத உண்மை. 1948ஆம் ஆண்டு ஸ்ரீ தேசிக ஸேவா ஸமிதி என்ற ஸ்தாபனத்தை நிறுவி, ஸேவா என்கிற மாதப் பத்திரிகையை துவங்கி, ஸேவா ஸ்வாமி என்றே உலக ப்ரஸித்தராய் விளங்கி வந்த ஸ்வாமியால். இந்த மாதப் பத்திரிகை சிற்சில இடைவெளியில் தொடர்ந்து நடத்தப்பட்டு வந்தது. 2001ம் ஆண்டு ஸ்வாமி திருநாட்டை அலங்கரித்த பிறகு, ஸ்ரீ தேசிக ஸேவா புதிய வடிவில் நடத்தப்பட்டு வருகிறது. ஸேவா ஸ்வாமியின் ஶதமான உத்ஸவம் தொடங்கும் வேளையில் **ஸ்ரீ தேசிக ஸேவா தனது 75வது வருடத்தைத்** தொடங்குவது அத்புதமான ஒரு சேர்க்கை.

எளிய நடையில் அனைவருக்கும் புரியும் வகையில் விஷயங்களை தெரிவித்து ஸம்ப்ரதாய பணியாற்றுவதே இந்த மாதப் பத்திரிகையின் நோக்கமாகும். தேசிக பக்தர்கள் அனைவரும் இம்மாதப் பத்திரிகையின் சந்தாதாரர்களாகச் சேர்ந்து பயனடையுமாறு வேண்டுகிறோம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

## ஸேவா ஸ்வாமி மெமோரியல் பவுண்டேஷன்

நெ.10 லக்ஷ்மீபுரம், 2வது தெரு, வில்லிவாக்கம், சென்னை 600 049.

**ஆண்டு சந்தா : ரூ 400.00** (தபால செலவு தனி)

**(ஸ்ரீ தேசிக தர்சன பஞ்சாங்கம் உட்பட)**

தபால செலவு - சென்னை - ரூ.50, இதர தமிழ்நாடு - ரூ.80

தென் மாநிலங்கள் - ரூ.120, பிற மாநிலங்கள் - ரூ.150

Account Name - **Seva Swamy Memorial Foundation**

**For Annual Membership of Sri Desika Seva Magazine** - Indian Bank, Villivakkam Branch, **Account No. 433474311 IFSC Code - IDIB000V023**

**For Life Membership / Donations / Contributions / Sponsorship of publications** - ICICI Bank, Chennai Harrington Road Branch, **Account No.168505000221. IFSC Code - ICIC0001685**

**For more details please contact : 9841046264 / 044-26180481**

# ஞான பஞ்சாயதனம்

## மணிமண்டபம் - வில்லிவாக்கம்

## 365 ஆயிரப்படி

மணிமண்டபத்தில் நித்ய ஆராதனமும், ஆழ்வார், ஆசார்யர்களின் உத்ஸவங்களும் விமர்சையாக நடைபெற்று வருவது யாவரும் அறிந்ததே! பரிமுகனுக்கும் அவன் ஞான பரிவாரமான ஆண்டாள், நம்மாழ்வார், நம்மிராமநுசன், ஸ்வாமி தேசிகன் ஆகியோர் இங்கே ஞான பஞ்சாயதனமாக அருள் பாலிக்கின்றனர். குறையொன்றுமில்லை! இருப்பினும், தனது உத்ஸவங்களையும் நித்யாராதனத்தையும் நிர்விக்னமாக ஆசந்த்ரதாரார்கம் நடத்திக் கொள்ள '**365 ஆயிரப்படி**' திட்டத்தை ஸங்கல்பித்தான். 36 ஆயிரப்படியே இதுவரை ப்ரஸித்தம்! இனி 365 ஆயிரப்படி! ஒரு நாள் உபயமாக ரூபாய் ஆயிரம்! உடையவர், 1000த்தில் 'உடையவர்கள்' முன்வரலாம்! 365 நாட்களுக்கும் 365 ஆயிரம் 'உடையவர்கள்' ஸேவை தேவை! பிரதி வருஷமும் ஆயிரம் செலுத்தி புதுப்பிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம். 'ஆட்ய ஸத்துக்கள் அகத்தில் பவதி பிக்ஷாம் தேஹி' என்றார் ஸ்வாமி! எம்பெருமான் ஆராதனத்திற்கு பிக்ஷையும் க்ராஹ்யமே! ஏற்றதே! 'இதுவே பரம்பரைக்கு தாயதனமும் ஆகலாம். திட்டத்தின் சீர்மையை உற்று நோக்க வேண்டும்! பரம்பரைக்கு பித்ரார்ஜிதமும் இதுவே!

மணிமண்டபத்தின் பொன்விழா ஆண்டு நிறைவடைந்து, தொடர்ந்து உத்ஸவங்கள் நடந்து வரும் இவ்வேளையில் மணியான இந்த திட்டத்தில் இணைத்துக் கொள்ளுமாறு வேண்டுகிறோம். உபயதாரர்கள் எழுந்தருளினால், கௌரவிக்கப் படுவார்கள்! எங்கிருந்தாலும் நினைவில் கொள்ளலாம்.மேலும் விவரங்களுக்கு : ஸேவா ட்ரஸ்ட், வில்லிவாக்கம், சென்னை - 600049. தொலைபேசி: 044-26180481 / 9841046264.

Bank details : SEVA TRUST, A/C No.409010003775, Kotak Mahindra Bank, Villivakkam Branch, Chennai - 49. IFSC Code: KKBK0008486.

# எமது வெளியீடுகள்

**ஸ்ரீ தேசிக ஸேவா** **400.00**
(ஆண்டு சந்தா 2022-23)

**ஸ்ரீ தேசிக தர்சன பஞ்சாங்கம்** **100.00**
(சுபக்ருத் வருஷம் 2022-23)

**ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாய பாடதிட்டம்** **200.00**
(ஸம்ப்ரதாய அடிப்படை விஷயங்கள்
- 100 பாடங்கள்)

**ஸ்ரீ யாதவாப்யுதயம் (மூலம் - தமிழ்)** **450.00**
(ஸேவா ஸ்வாமியின் முன்னுரையுடன்)

**ஆண்டாள் அருளிச் செய்த அமுதம்** **200.00**
(திருப்பாவை விளக்கவுரை -
Dr. ஹேமா ராஜகோபாலன்)

**சில்லரை ரஹஸ்யங்கள்** **300.00**
(விளக்கவுரையுடன் - Dr. என்.எஸ். ராஜகோபாலன்)

**ஸ்ரீபாஷ்யாதிகரணஸாரம்** **100.00**
(விளக்கவுரையுடன் - ஸ்ரீ சேட்லூர் ராகவன்)

**ஸ்ரீவைஷ்ணவ அபிமான ஸ்தலங்கள்** **200.00**
(தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்கள்)

**மொத்த விலை (தபால் செலவுடன்)** **2000.00**

எல்லா புத்தகங்களுக்கும், கூரியர் செலவுடன் சேர்த்து ரூ. 2000.00 என்று விலை நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது.

மேலும் விவரங்களுக்கு 044-26180481 அல்லது 9841046264 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

RNI No.TNMUL/2003/12412
R.Dis.No.2094/03
Postal Registration No. TN/TBM/11/2021-23
Licensed to post under WPP No. TN/PMG(CCR)/WPP-504/2021-23
Published on 15th of every month
Posted at Pathrika Channel, Egmore on 16/11/2022



## Sri Swami Desikar Aradhana Sabha

**Vedanta Desikar Devasthanam, Nellore, Andhra Pradesh**

**Sri K.C. Varadarajan, Managing Trustee, Mobile: 09849614897**

Published by N.S.Gandamani on behalf of Seva Swamy Memorial Foundation, from No.10, Lakshmipuram, II street, Villivakkam, Chennai-49. and printed by B.Paramasivan, at Basi Printers, Soni complex, 19/8A, Reddy street, Villivakkam, Chennai- 600 049. Editor: N.S. Gandamani